விலை: 50.00
பக்கங்கள் - 20
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 245 வள்ளுவர் ஆண்டு 2056 ஆவணி 05 வியாழக்கிழமை (21.08.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

பொதிகள் சேவை
Parcel.lk GTV Express
நாங்கள் உங்கள் வீட்டுக்கு டெலிவரி செய்கிறோம்

| | | | |
|---|---|---|---|
| இங்கிலாந்து | - Rs.1400/= | அவுஸ்திரேலியா | - Rs.1700/= |
| ஜெர்மனி | - Rs.1900/= | சுவிஸ் | - Rs.2550/= |
| பிரான்ஸ் | - Rs.2000/= | இத்தாலி | - Rs.2250/= |

11kg க்கு மேல் 01kg க்கான கட்டணம்
இல. 81A, பருத்தித்துறை வீதி, நல்லியடி
இல.225, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
GTV Enterprises (Pvt) Ltd (1335) 011 4 654 444

## கரவெட்டியில் விபத்து; குடும்பஸ்தர் மரணம்

(கரணவாய்)

கரவெட்டியில் இடம்பெற்ற விபத்தில் குடும்பஸ்தர் ஒருவர் மரணமடைந்துள்ளார்.

இதில் பொன்னம்பலம் பாடசாலை வீதி, நெல்லியடியைச் சேர்ந்த லட்சுமணன் நகுலேஸ்வரன் (வயது - 61) என்ற 5 பிள்ளைகளின் தந்தையே உயிரிழந்தவராவார். 19ஆம் பக்கம் பார்க்க

# ஈஸ்டர் தாக்குதல்தாரியை அநுர அரசும் நன்கு அறியும்

## ஆனால் அவரை ஒன்றும் செய்ய முடியாது முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால



(கொழும்பு)

ஏப்ரல் 21 தாக்குதல் சூத்திரதாரியை அநுர அரசாங்கத்துக்கு நன்கு தெரியும். ஆனால் அவர்களால் அவரை ஒன்றும் செய்ய முடியாது என முன்னாள்ஜனாதிபதிமைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

(19ஆம் பக்கம் பார்க்க)

## வடக்கில் கெடுபிடி என்ற விம்பத்தை உருவாக்க முயற்சி



சபையில் அமைச்சர் பிமல்

(கொழும்பு)

வடக்கு மாகாணத்தில் மக்கள் மத்தியில் அரசாங்கம் அதிக கெடுபிடி 19ஆம் பக்கம் பார்க்க

## அலங்கார நல்லூரானுக்கு இன்று இரதோற்சவம்

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் இரதோற்சவம் இன்றாகும்.

காலை 6.15 மணிக்கு வசந்த மண்டபப் பூசை நடைபெற்று காலை 7 மணிக்கு ஆறுமுகசுவாமி தேரில் ஆரோகணிப்பார். 19ஆம் பக்கம் பார்க்க



## சப்பறத்தில் அலங்காரக் கந்தன்



படங்கள் - சிவசாந்தன்



19ஆம் பக்கம் பார்க்க

## நல்லூர்க் கந்தனின் தேரை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விசேட விடுமுறை

(யாழ்ப்பாணம்)

வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர்க் கந்தசுவாமி கோவிலின் தேர்த் திருவிழாவை முன்னிட்டு யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று விசேட விடுமுறை வழங்கப்பட்டுள்ளது.

நல்லூர் கந்தசுவாமி ஆலயத் தேர்த் திருவிழாவை முன்னிட்டு பாடசாலை மாணவர்கள், ஆசிரியர்கள் குறித்த நிகழ்வில் பங்கு பெற வேண்டும் எனும் நோக்கில் யாழ்.மாவட்ட பாடசாலைகளுக்கு இன்று 19ஆம் பக்கம் பார்க்க




நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# INVITATION FOR BIDS 2025/08

## PUTHUKKUDIYIRUPPU PRADESHIYA SABHA

1. The **Chairman**, Divisional Procurement Committee on behalf of the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** invites sealed bids from eligible and qualified bidders for the works described in the table below. All the relevant details are described in the same table.
2. Bidding will be conducted through **National Competitive Bidding Procedure (NCB).**
3. To be eligible for contract award, the successful bidder shall not have been blacklisted and shall have been registered with the Construction Industry Development Authority (CIDA) in the field of **highway construction** for grade mentioned in the table below.
4. Qualification' requirements are indicated in section 4 of the Procurement Document. Additional details are provided in the Section 5 of the Procurement Document.
5. Interested bidders may obtain further information from address given below in 6 and inspect the bidding documents at the same place on any working days from during the document issuing period mentioned in table below between 09:00 hrs and 15:00 hrs.

| | | Document Issuing/Purchasing Period | | | From 21.08.2025 until 02.09.2025 | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | Pre-Bid Conference | | | At 10.30 A.M on 28.08.2025 | | | | | |
| | | Closing and Opening of Bids | | | At 10.30 A.M on 03.09.2025 | | | | | |
| S/No | Bid ID | Description of Work | Source of Fund | Estimated Cost (Rs.) In Million (without VAT) | Contract Period (Days) | Required CIDA Grade & Speciality | Non-Refundable Fee (Rs.) | Bid Validity Period upto | Required Bid Security Amount (Rs.) | Required Bid Security Validity Period |
| 01 | PSDG/NP/MU/PTKPS/2025/LAR/07 | Construction of Mankulam Kudiyiruppu Road (Stage ii) | PSDG | 1.80 | 63 | C9 or Above (Highway) | 2,000.00 | 21-Oct-2025 | 30,000.00 | 18-Nov-2025 |
| 02 | PSDG/NP/MU/PTKPS/2025/LAR/06 | Construction of Neththaliyaru School Road (Stage ii) | PSDG | 2.26 | 63 | C9 or Above (Highway) | 2,000.00 | 21-Oct-2025 | 30,000.00 | 18-Nov-2025 |

6. A complete set of Procurement Documents in English language may be purchased by interested bidders on the submission of a written application to the **Chairman, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu (T.P:0212291024, email:pkips@gmail.com) from 9:00 hrs to 15:00 hrs. during the period stated in table above upon payment of non-refundable fees as mentioned in the table.** The method of payment will be by cash.
7. Bids (Original & Duplicate) must be delivered to the Chairman, **Divisional Procurement Committee, Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu** on or before **10.30 A.M as stated in table above.** Bid number must be written on the left-hand upper corner of the envelope. Late Bids will be rejected. Bids will be opened soon after closing in the presence of the Bidder's representatives who choose to attend at **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu.**
8. Pre-Bid Conference will be held at Conference Hall, **Puthukkudiyiruppu Pradeshiya Sabha, Paranthan Road, Puthukkudiyiruppu commencing at 10.30 AM as stated in table above.**
9. Bids shall be accompanied by a Bid security as per the information given in the Tables.

**Chairman**
**Divisional Procurement Committee,**
**Puthukkudiyirippu Pradeshiya sabha,**
**Paranthan Road, Puthukkudiyiruppu.** (C-3710) 21.08.2025

# வேலையாட்கள் தேவை

## இரா முதியோர் இல்லம், கனகபுரம், கிளிநொச்சி

இவ்வில்லம் சார்பாக பன்முக வேலைகளை ஆர்வமுடன் ஆற்ற மனப்பக்குவமுள்ள வேலையாட்கள் தேவை. (Auto சாரதி உட்பட) இல்லத்தில் தங்கிக் கடமை ஆற்றும் வேலை. தங்குமிடம் + உணவுடன் ரூ.40,000/=

(C-3684)

**076 879 2127, 074 205 8803**

# நீங்கா நினைவுகள்

16 ம் ஆண்டு 5 ம் ஆண்டு



அமரர் செல்லையா கோபாலபிள்ளை
அன்னை மடியில் 1942.07.08
ஆண்டவன் அடியில் 2009.01.18

அமரர் கோபாலபிள்ளை மகாலட்சுமி
அன்னை மடியில் 1951.12.24
ஆண்டவன் அடியில் 2020.09.14

"ஆயிரம் கோடி உறவுகள் இருந்தாலும்
அப்பா அம்மா இல்லையெனில் யாரும் அநாதை தான்"

ஆண்டுகள் பல கடந்தாலும் உங்கள் நினைவு எம் மனதில் ஆழமாய் உள்ளது. நீங்கள் எங்கள் நெஞ்சங்களில் எப்போதும் வாழ்ந்து கொண்டே இருப்பீர்கள்.நாங்கள் எங்கு சென்றாலும் நீங்கள் நிழலாய் பயணிக்கும் அந்த உணர்வுதான் எங்களை இவ்வுலகில் வாழவைக்கின்றது.


(1466)

"தாயகம்",
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு, கொக்குவில்.

என்றும் நீங்கா நினைவுடன்
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

மலர்வு 27 - 09 - 1961



உதிர்வு 19 - 08 - 2025

## இலட்சுமணன் நகுலேஸ்வரன்
## (நகுலன் – பிரபலவர்த்தகர்)

சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் சுமதி இல்லம் மூத்தவிநாயகர் கோவிலடி கரணவாய் மத்தி கரவெட்டியை வசிப்பிடமாகவும் கொண்ட இலட்சுமணன் நகுலேஸ்வரன் (நகுலன் - பிரபல வர்த்தகர்) அவர்கள் கடந்த 19.08.2025 செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இலட்சுமணன் - கற்பகம் தம்பதியினரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தாமோதரம்பிள்ளை - கனகாம்பிகை தம்பதியினரின் அன்பு மருமகனும் காலஞ்சென்ற யோகறஞ்சினி (சுமதி) அவர்களின் பாசமிகு கணவரும் சரஸ்வதி, பிறேமாவதி(ஓய்வுபெற்றஆசிரியை), காலஞ்சென்ற நகுலேஸ்வரி, குபேந்திரன்(ஆசிரியர்-கிளி/கரியாலை நாகபடுவான் இல.3 அ.த.க.பா) ஆகியோரின் அன்புச் சகோதரனும் மதிகலன்(தம்போ - பிரான்ஸ்), கயூரன், கிசேனி(அவுஸ்திரேலியா), துசானி, மகிஸன்(பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தந்தையும் ஜனனி(பிரான்ஸ்), ரூபிகா, சயந்தன்(அவுஸ்திரேலியா), ராகுல்பிரசாத் ஆகியோரின் அன்பு மாமனாரும் நவரட்ணசிங்கம், குகனேஸ்வரன்(குகன்மாஸ்ரர்), மதிவதனி ஆகியோரின் அன்பு மைத்துனரும் கெரோன், சன்விகா, ஆர்ணிகா, திக்ஷா, மிஷானா, ஆதித்தியா, கிருத்திகா, ஹரிஸ்ணி ஆகியோரின் ப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 21.08.2025 வியாழக்கிழமை காலை 10.30 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக எள்ளங்குளம் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.


இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள், அயலவர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

நெல்லியடி (C - 3683) தகவல்: குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்

## சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை

(ஓய்வுபெற்ற சங்கானை பலநோக்கு கூட்டுறவு சங்க விற்பனையாளர்)



பிறப்பு 27.01.1937 இறப்பு 19.08.2025

வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் சண்டிலிப்பாயை வசிப்பிடமாகவும் கொண்ட சுப்பிரமணியம் கணபதிப்பிள்ளை கடந்த செவ்வாய்க்கிழமை (19.08.2025) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சுப்பிரமணியம் - விசாலாட்சி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான செல்லையா - பரமேஸ்வரி தம்பதியரின் பாசமிகு மருமகனும் கனகபூரணி (கமலா) அவர்களின் பாசமிகு கணவரும், கரிகரன் (தபால் ஊழியர் - சண்டிலிப்பாய்), கஜேந்திரன் (கஜன் ஸ்ரோர்ஸ்) , கஜீபன் (அமெரிக்கா) ஆகியோரின் அன்புத் தந்தையும் யசோதா, விஜிதா, சாளினி ஆகியோரின் மாமனாரும் கம்ஸனா, லக்ஸனா, வர்ஷா, அக்ஸா, கனிஷா ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற கனகசபை, மகாதேவன் மற்றும் மனோன்மணி ஆகியோரின் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (22.08.2025) வெள்ளிக்கிழமை காலை 9.00 மணிக்கு அவரது இல்லத்தில் (கனகவாசம்) நடைபெற்று திருவுடலானது அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல் : குடும்பத்தினர்
ராசா - 076 640 6912
கஜன் - 077 862 5246

(5104)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தில் திறண்மிக்க.


# தொழில் திறனாய்வு பயிற்சி நெறிகள்

முற்றிலும் இலவசம்

பங்கு பற்றியதற்கான சான்றிதழ்

## உங்கள் வெற்றிப் பயணத்தை தொடங்குங்கள்.

வேலைவாய்ப்பு உலகில் முன்னேற விரும்புகிறீர்களா? அப்படியானால் இந்த தொழில் திறனாய்வு (CAREER SKILLS) பயிற்சி நிகழ்ச்சிகள் உங்களுக்கான சிறந்த வாய்ப்பு..



- ☑ வேலைவாய்ப்புக்குத் தேவையான திறன்கள்
- ☑ கணினி / நவீன தொழில் நுட்ப பயிற்சி
- ☑ தொடர்பாடல் & மேலாண்மை திறன்கள்
- ☑ சர்வதேச தரத்திலான சான்றிதழ்
- ☑ வேலை சந்தையில் அதிக மதிப்புள்ள துறைகள்

### ஏன் இந்த பயிற்சி நெறியை தெரிவு செய்ய வேண்டும்?

- ☑ தொழில் துறை, தொழில்நுட்பம் சார்ந்த அனுபவமிக்க விரிவுரையாளர்கள்.
- ☑ மாணவர்களுக்கு உகந்த கற்பித்தல் முறைகள்
- ☑ அங்கீகரிக்கப்பட்ட சான்றிதழ்கள்
- ☑ தொழில் வெற்றிக்கு வழிகாட்டும் பயிற்சிகள்

**இது சாதாரண பயிற்சி அல்ல ! உங்கள்வாழ்க்கையை மாற்றும் ஒரு வாய்ப்பு!**

## இன்றே பதிவு செய்யுங்கள் !

**VAVUNIYA BRANCH**
0242 222 313 | 077 111 8446
No.05, Kovil Road, Kurumankadu, Vavuniya
Date = 24-Aug-2025 | Time = 10:00AM

**MANNAR BRANCH**
023 222 2167 | 0771204654
RDF Building Lane 1st Cross Street Pettah Mannar
Date = 30-Aug-2025 | Time = 10:00AM

**JAFFNA - THIRUVALLUVAR HALL**
021 222 9901 | 077 666 6648
Esplanade Rd, Jaffna
Date = 07- Sep-2025 | Time = 10:00AM

(C-3702)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எச்சரிக்கை மட்டத்தில் வெப்பத்தின் அளவு

## போதியளவு நீர் அருந்துமாறு அறிவுறுத்து

(கொழும்பு)

**நாட்டின் சில பகுதிகளில் நேற்று முதல் வெப்பத்தின் அளவு, மனித உடலால் உணரப்படும் அளவிற்கு எச்சரிக்கை மட்டத்தில் இருக்கக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.**

இதற்கமைய, கிழக்கு, வடமத்திய மாகாணம் மற்றும் அம்பாந்தோட்டை, மொனராகலை, வவுனியா, முல்லைத்தீவு, கிளிநொச்சி ஆகிய மாவட்டங்களிலும் வெப்பமான காலநிலை நிலவும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

திணைக்களத்தின் அறிவிப்பின் படி, 10 மாவட்டங்களுக்கு வெப்பத்தின் அளவு குறித்து ஆம்பர் எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மனித உடலில் உணரப்படும் வெப்பச் சுட்டெண், குறித்த மாவட்டங்களில் சில இடங்களில் 'எச்சரிக்கை நிலை' வரை அதிகரிக்க வாய்ப்புள்ளதாக திணைக்களம் தெரிவித்துள்ளது.

எனவே, அந்த பகுதிகளில் உள்ள பொதுமக்கள் இது குறித்து விழிப்புடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

இந்த நிலையில், பொது மக்கள் போதியளவு நீர் அருந்துமாறும் இது தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறும் அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

அத்துடன் வயோதிபர்கள், சிறுவர்கள் மற்றும் நோயாளர்கள் குறித்தும் மிகுந்த அவதானம் செலுத்துமாறு வளி மண்டலவியல் திணைக்களம் கோரியுள்ளது. (நி)

# யாழ்.விமான நிலையத்தை வினைத்திறனாக மாற்ற முயற்சி

## அமைச்சர் பிமல் உறுதி



(கொழும்பு)

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் படிப்படியாக வணிகத் திட்டத்துடன் மேம்படுத்தப்படும் என்று போக்குவரத்து, நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சர் பிமல் ரத்நாயக்க நேற்று பாராளுமன்றத்தில் உறுதியளித்தார்.

இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் எஸ். சிறீதரன் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், சுமார் 130 பயணிகளை ஏற்றிச் செல்லக்கூடிய விமானங்களை தரையிறக்க வசதியாக ஓடுபாதையை விரிவுபடுத்த திட்டமிடப்பட்டுள்ளது. மத்தள சர்வதேச விமான நிலையத்தில் உள்ளது போல பெரிய அகல-உடல் விமா னங்களை ஏற்றிச் செல்லும் வகையில் விமான நிலையத்தை விரிவுபடுத்த முடியாது என்பதால் அது சாத்தியமில்லை.

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தால் பெருமளவு நிதியைப் பயன்படுத்தும் மத்தள விமான நிலையத்தைப் போலல்லாமல், யாழ்ப்பாண விமான நிலையத்தை ஒரு வினைத்திறனாக மாற்ற உறுதியாக இருப்பதாகவும் அவர் வலியுறுத்தினார்.

எதிர்காலத்தில் யாழ்ப்பாண விமான நிலையத்திற்கு விமான நிறுவனங்களை ஈர்ப்பதற்காக விமானப் போக்குவரத்து கட்டணத்தை மேலும் குறைப்பது குறித்தும் அரசாங்கம் பரிசீலிக்கும் என்று அமைச்சர் குறிப்பிட்டார். (நி)



வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 18 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான 3000 மீற்றர் ஓட்டத்தில் முல்லைத்தீவு பாரதி வித்தியாலய மாணவி ஜெ.அனித்தா தங்கப் பதக்கத்தையும், கிளிநொச்சி வட்டக்கச்சி மத்திய கல்லூரி மாணவி எம்.கபிலா வெள்ளிப் பதக்கத்தையும், இளவாலை கன்னியர் மடம் மகாவித்தியாலய மாணவி ஏ.அபிஷா வெண்கல பதக்கத்தையும் கைப்பற்றினர்.

வடமாகாண பாடசாலைகளுக்கிடையிலான 20 வயதிற்கு உட்பட்ட பெண்களுக்கான குண்டு எறிதல் போட்டியில் மன்னார் தோட்டவெளி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவி ஏ.ஜதுர்ஷிகா தங்கப் பதக்கத்தையும், சுண்டுக்குழி மகளிர் கல்லூரி மாணவி ஜே.மரிய திலக்சி வெள்ளிப் பதக்கத்தையும், வேலணை மத்திய கல்லூரி மாணவி கே.விஸ்ணுகா வெண்கலப் பதக்கத்தையும் கைப்பற்றினர்.





நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்திர மகோற்சவத்தை முன்னிட்டு , இந்திய துணைத்தூதரகத்தின் ஏற்பாட்டில் பிரபல கர்நாடக இசைக் கலைஞர் கலாநிதி நித்தியஸ்ரீ மகாதே வனின் கர்நாடக இசை நிகழ்வு, யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை இரவு நடைபெற்றது. நிக ழ்வில் இந்திய துணைத்தூதர் சாய்முரளி , இந்திய தூதரக அதிகாரிகள் , இசைத்துறை மாணவர்கள், கர்நாடக இசை ரசிகர்கள் எனப் பலர் கலந்து கொண்டிருந்தனர்.

(படங்கள்: சிவசாந்தன்)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆசிரியர் நியமனங்களில் புதிய கட்டுப்பாடு

## கல்வி அமைச்சு அதிரடி அறிவிப்பு



(கொழும்பு)

தேவையான தர நிலைகளைப் பூர்த்தி செய்யாது கல்வி இளங்கலைப் பட்டம் பெற்ற நபர்கள் இனி ஆசிரியர் சேவையில் சேர்க்கப்பட மாட்டார்கள் என்று கல்வி அமைச்சு அறிவித்துள்ளது.

தனியார் பல்கலைக் கழகங்கள் வழங்கும் கல்வி இளங்கலைப் பட்டங்களின் தரத்தை மதிப்பிடுவதற்கு ஒரு விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகக் கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

எதிர்காலத்தில் ஆசிரியர் நியமனங்களை வழங்குவதற்குத் தேசிய தர நிலைகளுக்கு இணங்கும் பட்டங்கள் மட்டுமே செல்லுபடியாகும் என்று அவர் மேலும் வலியுறுத்தினார்.(நி)

# நூல் வெளியீடு

(யாழ்ப்பாணம்)

கலாபூசணம் பரீட் இக்பால் எழுதும் "முத்திரை பதித்த யாழ் முஸ்லீம்கள்" எனும் நூல் விரைவில் வெளிவரவுள்ளது.

இந்நூல் யாழ்ப்பாணம் சோனகத் தெருவில் கல்வித் துறை, அரச நிர்வாகத் துறை அரசியல் துறை ஆன்மிகத் துறை சமூகங்களுக்கிடையிலான சமாதானத்துறை மற்றும் குடும்பங்களுக்கிடையிலான சமாதானத் துறை ஆகியனவற்றில் சாதித்து இறையடி எய்திய யாழ் முஸ்லீம்களின் வரலாறு இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது. (3)

# யாழ்.பல்கலைக்கழக ஊழியர்கள் நேற்று அடையாள வேலை நிறுத்தம்




(யாழ்ப்பாணம்)

யாழ் பல்கலைக்கழக ஊழியர் சங்கம் நேற்று புதன்கிழமை ஒருநாள் அடையாள வேலை நிறுத்தப் போராட்டத்தை முன்னெடுத்திருந்தனர்.

சம்பள முரண்பாடு, ஆட்சேர்ப்பு, வாக்குறுதிகள் நிறைவேற்றப்படாமை உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்து இவ் அடையாள வேலை நிறுத்தப் போராட்டம் இடம்பெற்றது.

நாடு முழுவதும் உள்ள அரச பல்கலைக்கழகங்கள் இந்த அடையாள வேலை நிறுத்தப்போராட்டத்தை முன்னெடுத்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (8)

# மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

ஊர்காவற்றுறை நாரந்தனை வடக்கு பண்டாரபுலம் திருப்பதியில் கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் தான் தோன்றி ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்வசம் எதிர் வரும் 28 ஆம் திகதி வியாழக்கிழமை காலை 10 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பதினொரு தினங்கள் மஹோற்சவங்கள் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் செப்ரெம்பர் மாதம் 5 ஆம் திதகி வெள்ளிக்கிழமை நண்பகல் 1 மணிக்கு வேட்டைத்திருவிழாவும் இரவு சப்பரத்திருவிழாவும் நடைபெறவுள்ளது. அதனைத் தொடர்ந்து மறுநாள் 6 ஆம் திகதி சனிக்கழமை காலை 9 மணிக்கு தேர்த்திருவிழாவும், 7 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும் இடம்பெற்று அன்றைய தினம் இரவு 7 மணிக்கு கொடியிறக்க உற்சவத்துடன் மஹோற்சவங்கள் நிறைவடையவுள்ளதென ஆலய சைவ மகா சபையினரும் உபயகாரர்களும் அறிவித்துள்ளனர். (3)

# கஞ்சா பயிரிட அனுமதிக்கும் தீர்மானத்துக்கு இலங்கை மருத்துவர் சங்கம் எதிர்ப்பு

(கொழும்பு)

வெளிநாட்டவர்களுக்கு இலங்கையில் கஞ்சா பயிரிட அனுமதிப்பது என்ற அரசாங்கத்தின் முடிவை இலங்கை மருத்துவ சங்கம் கடுமையாக எதிர்த்துள்ளது.இத்தகைய அனுமதியினால் கடுமையான சுகாதார, சமூக மற்றும் பொருளாதார அபாயங்கள் ஏற்படும் என அந்தச் சங்கம் அறிக்கையொன்றை வெளியிட்டு எச்சரித்துள்ளது.

மருத்துவ பயன்பாட்டுக்கு கஞ்சாவைப் பயிரிடுவதை நியாயப்படுத்துவது தவறானது என்று மருத்துவ சங்கம் குறிப்பிட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டு முதல் மருத்துவ கஞ்சாவுக்காக உலகளாவிய தேவை குறைந்துள்ளது.பாதுகாப்பான தோட்டங்களை பராமரிப்பது சாத்தியமற்றது என்றும், உள்ளூர் போதைப்பொருள் பயன்பாடு அதிகரிக்கும் என்றும் அந்த சங்கம் தெரிவித்துள்ளது.

மனநோய், போதை பழக்கம், நுரையீரல் நோய் மற்றும் வீதி விபத்துகள் போன்றனவும் அதிகரிக்கக் கூடும் எனவும் எச்சரித்துள்ளது.

பொருளாதார ரீதியாக, நாட்டின் கடன் மற்றும் வெளிநாட்டு பணவனுப்பலுடன் ஒப்பிடும்போது இதனூடாக எதிர்பார்க்கப்படும் ஆதாயங்கள் மிகக் குறைவாக இருக்கும்.

எனவே, இந்த நடவடிக்கை வெளிநாட்டு நிறுவனங்களுக்கு பயனளிக்கும் என்ற போதிலும் இலங்கையர்களுக்கு சொல்ல முடியாத துயரத்தை ஏற்படுத்தும் என்றும் இலங்கை மருத்துவ சங்கம் எச்சரித்துள்ளது. (நி)



வட மாகாண மகளிர் விவகார அமைச்சின் ஒழுங்கமைப்பில் தொழிற்றுறைத் திணைக்களம், சமூக சேவைகள் திணைக்களம், கூட்டுறவு அபிவிருத்தித் திணைக்களம் என்பவற்றினால் முன்னெடுக்கப்படும் கிளீன் ஸ்ரீலங்கா வேலைத்திட்டம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை நல்லூர் திவ்ய ஜீவன சங்க மண்டபத்தில் நடைபெற்றது.



# நல்லூர் பிரதேசசபை கொக்குவில் உப அலுவலகம் ஆதன பெயர் மாற்றம்

கொக்குவில் உப.அலுவலக ஆளுகைக்குட்பட்ட சோலைவரி வட்டாரம் 10 கமட்டான் வீதியில் இலக்கம் 19 இல் காணப்படும் ஆதனமானது S.R.முத்துப்பிள்ளை உ.கோ.S.அன்னலிங்கம் என்ற பெயர்களில் காணப்படுகின்றது. குறித்த ஆதனத்தை திரு . திருமதி சற்குணம் பபிதா என்பவர்கள் தங்களது பெயரை ஆதனப்பதிவேட்டில் உட்புகுத்துவதற்கு வரியிறுப்பாளர்களாக விண்ணப்பித்துள்ளார்கள்.

1. திரு.திருமதி.சற்குணம் பெண் பபிதா என்பவர்களின் உறுதியை பிரசித்த நொத்தாரிசு செல்வி ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 834ஆம் இலக்கத்தில் 06.09.2003 இல் நன்கொடை உறுதியாக நிறைவேற்றியுள்ளார். இதன் அளவுகள் நில.பர.01 குளி 17 என காணப்படுகின்றது.
2. விண்ணப்பதாரரின் நில அளவைப்படத்தை உத்தரவு பெற்ற நில அளவையாளர்.திரு. T.தங்கராஜா அவர்களினால் 05.10.1999அம்திகதி 1303ஆம் இலக்கத்தின்படி நில.பர. 01 குளி 17 என்ற விபரத்திற்கமைவாக வரைந்துள்ளார்.
3. குறித்த ஆதனம் "கமட்டான்" என்ற பெயரிலும் மேற்குறித்த உறுதியின் பிரகாரமும் மேற்குறித்த நில அளவைப் படத்தின் பிரகாரமும் பின்வருமாறு எல்லைகள் காணப்படுகின்றது. கிழக்கும் தெற்கும் ஒழுங்கை ,வடக்கு அமரகவி சனசமூக நிலையம், மேற்கு பேரம்பலம் பூமலரின் ஆதனம்.
4. ஆதனப்பெயர் மாற்று விண்ணப்பதாரர்களது தாய் உறுதியானது பிரசித்த நொத்தாரிசு செல்வி.ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 24ஆம் இலக்கத்தில் 1999.12.04ஆம் திகதிய உறுதியானது அறுதி எனவும் 24ஆம் இலக்க உறுதியின் தாயுறுதியானது பிரசித்த நொத்தாரிசு செல்வி.ஞானலோஜினி சிவஞானம் அவர்கள் முகதாவில் 17ஆம் இலக்கத்தில் 1999.10.16 ஆம் திகதிய உறுதியானது வெளிப்படுத்தல் உறுதியாகவும் காணப்படுகின்றது.
5. ஆரம்ப உறுதியானது வெளிப்படுத்தல் உறுதியாக காணப்படுவதால் விண்ணப்பதாரியின் ஆதனப் பெயர்மாற்று விண்ணப்பத்தை நல்லூர் பிரதேச சபையின் சட்ட ஆலோசகருக்கு சட்ட ஆலோசனைக்காக அனுப்பிவைக்கப்பட்டது. சட்ட ஆலோசகரின் அறிக்கையின்படியும். நல்லூர் பிரதேச சபையின் செயற்பாடுகளில் வெளிப்படத்தன்மை அவசியம் என்பதாலும் குறித்த ஆதனப்பெயர் தொடர்பான விண்ணப்பத்தை ஆதனப்பெயர் மாற்றம் மேற்கொள்ளும் பொருட்டு யாழ் குடாவிலிருந்து வெளிவரும் பத்திரிகைகளில் கட்டணம் செலுத்தப்பட்ட விளம்பரமாக பிரசுரிக்கப்படுகின்றது.

மேற்படி விபரங்களை வெளிப்படுத்தி சற்குணம் பெண் பபிதா என்பவர் ஆதனப்பெயர்மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். இவ்வாதனம் தொடர்பான உரித்தாளர்கள் வேறு யாராவது காணப்பட்டால் தங்களது ஆட்சேபனைகளை பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து முப்பது (30) நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ, வெளிநாட்டில் வசிப்பவர்களாயிருந்தால் இங்குள்ள உறவினர் மூலமாகவோ தங்களது ஆட்சேபனைகளை செயலாளர், நல்லூர் பிரதேசசபை என்னும் முகவரிக்கு தபால் மூலமாகவோ அல்லது நேரடியாகவோ தெரிவிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம். யாரும் ஆட்சேபனைகள் தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரரான சற்குணம் பெண் பபிதா என்பவரின் பெயருக்கு ஆதனப் பெயர்மாற்றம் மேற்கொள்வதால் வரக்கூடிய எப்பொறுப்புக்கும் நல்லூர் பிரதேசசபை பொறுப்பாளி ஆகாது என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றோம். (சட்டபூர்வமான ஆவணங்களைச் சமர்ப்பிக்காத அனைத்து முறைப்பாடுகளையும் நிராகரிக்கும் அதிகாரம் நல்லூர் பிரதேசசபைக்கு உண்டு. என்பதனையும் தெரிவித்துக் கொள்கின்றேன்)

**தவிசாளர்,**
**நல்லூர் பிரதேசசபை,**
**கொக்குவில்.**

(C- 3682)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



வரலாற்றுச் சிறப்புமிக்க நல்லூர் கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவத்தின் 22 ஆம் நாள் திருவிழாவின் ஒருமுகத்திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை பக்திபூர்வமாக இடம்பெற்றது. (படங்கள்:- சிவசாந்தன்)

# நல்லூர் உற்சவகால தெய்வீக இசையரங்கு

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு இலங்கை இளங்கலைஞர் மன்றமும் நல்லூர் துர்க்காதேவி மணி மண்டபமும் இணைந்து வழங்கும் "தெய்வீக இசையரங்கு" இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணி முதல் 8.30 மணி வரை நல் லூர் துர்க்காதேவி மணி மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

அந்த வகையில் இசையரங்கு நிகழ்வில் பாட்டு - செல்வி சைந்தவி கேதீஸ்வரன், வயலின் - கே - வேலதீபன், மிருதங்கம் - க. இசைநிலவன், முகர்சிங் - சே. சிவயெனன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர் ந்து இடம்பெறவுள்ள இசைய ரங்கு நிகழ்வில் பாட்டு - அ.அமிர்தலோஜன் மற்றும் அ.அமிர்தசிந்துஜன், வயலின் - கா. குகபரன், மிரு தங்கம்- க.கஜன், கெஞ்சிரா - நா.சிவ சுந்தரசர்மா, கடம் - கு.ரவிசங்கர், முகர்சிங் - சி. செந்தூரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர். (3)

## வவுனியா குளத்தின் ஆற்றுப் பகுதியில் சட்டவிரோத மரக்கடத்தல்



(வவுனியா)

வவுனியா குளத்தின் ஆற்றுப்பகுதியில் நிற்கும் பழமையான மருத மரங்கள் இனம் தெரியாத குழுக்களால் வெட்டிக் கடத்தப்படுவதாக கிராம மக்கள் குற்றம்சாட்டியுள்ளனர்.

வவுனியா குளத்தில் இருந்து தாண்டிக்குளத்திற்கு செல்லும் ஆற்றின் கரைகளில் பழைமையான மருத மரங்கள் அதிகளவில் காணப்படுகின்றன.

பூந்தோட்டம் வீதியூடாக குறுக்கறுத்துச் செல்லும் அந்த ஆற்றின் கரைகளில் காணப்படும் குறித்த மரங்கள் அண்மைய நாட்களாக இனம் தெரியாத நபர்களால் சட்டவிரோதமாக வெட்டப்பட்டு கடத்திச் செல்லப்படுவதாக பொதுமக்கள் தெரிவிக்கின்றனர்.

குறிப்பாக பூந்தோட்டம் நரசிங்கர் ஆலயத்திற்கு பின்புறமுள்ள பகுதியிலேயே இவ்வாறு மரங்கள் வெட்டப்பட்டுள்ளது. அண்மைய நாட்களில் 7 வரையான மரங்கள் அடியோடு வெட்டிச் செல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

எனவே, குறித்த சட்டவிரோத செயற்பாட்டை உரிய திணைக்களங்கள் உடனடியாகத் தடுத்து நிறுத்த வேண்டும் என்று பொதுமக்கள் கோரிக்கை முன்வைத்துள்ளனர். (8-250)

## நல்லூர் உற்சவகால அருளுரை

(யாழ்ப்பாணம்)

நல்லூர் முருகன் உற்சவ காலத்தை முன்னிட்டு சிவகுரு ஆதீனத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டு வரும் "அருளுரை" இன்று வியாழக்கிழமை இரவு 8 மணி முதல் 8.30 மணி வரை சிவகுரு ஆதீன மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

இந் நிகழ்வில் ஆதீன முதல்வர் தவத்திரு வேலன் சுவாமிகள் கலந்து கொண்டு "வென்றவரோடு உறும் வேலவனே" எனும் தலைப்பில் அருளுரை ஆற்றுவார். (8)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 200 | 220 | 200 | 250-300 |
| உருளைக்கிழங்கு | 200 | 190 | 180 | 160 |
| பச்சைமிளகாய் | 140 | 150 | 200 | 120 |
| தக்காளி | 160 | 200 | 150 | 160 |
| மரவள்ளிக்கிழங்கு | 250 | 300 | 280 | 250 |
| கோவா | 250 | 280 | 300 | 250 |
| கரட் | 450 | 500 | 500 | 420 |
| பூசணி | 100 | 100 | 100 | 60 |
| புடோல் | 150 | 100 | 150 | 80 |
| வாழைக்காய் | 150 | 120 | 100 | 100 |
| சின்ன வெங்காயம் | 250 | 150-300 | 250 | 250 |
| பெரிய வெங்காயம் | 150 | 160 | 150 | 120 |
| பாகற்காய் | 400 | 450 | 400 | 400 |
| வெண்டக்காய் | 100 | 120 | 150 | 100 |
| கருணைக் கிழங்கு | 350 | 330 | 250 | 250 |
| பயற்றங்காய் | 400 | 400 | 300 | 280 |
| லீக்ஸ் | 350 | 250 | 300 | 200 |
| பீற்றூட் | 100 | 140 | 150 | 120 |
| கறிமிளகாய் | 400 | 500 | 400 | 350 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 400 | 160 |
| போஞ்சி | 700 | 700 | 400 | 500 |
| கத்தரிதம்புள்ள | 150 | 200 | 150 | -- |
| கீரை – 1 பிடி | 100 | 40-120 | 100 | 80 |
| தேசிக்காய் | 200 | 100 | 150 | 350 |
| தேங்காய் (ஒன்று) | 150 | 180 | 150 | 120-160 |
| இராசவள்ளி | 800 | 700 | 500 | 500 |
| வெங்காயப்பூ | 450 | 300 | 150 | 250 |
| முள்ளங்கி | 100 | 160 | 100 | 120 |
| பொன்னாங்காணி | 100 | 50 | 150 | 100 |
| வல்லாரை | 80 | 70 | 100 | 80 |
| ஈரப்பலா | 100 | 200 | 100 | 100 |

# இராசிபலன்

21.08.2025
ஆவணி 05, வியாழக்கிழமை
திரயோதசி பிற்பகல் 1.45 மணி வரை

பூசம் பின்னிரவு 1.49 மணிவரை
சுப நேரம் 7.35-9-05 மணிவரை
இராகு காலம் 1.35 - 3.05 மணிவரை

அமிர்த சித்தம்
சந்திராஷ்டமம்
மூலம்.

வளவன்

**மேஷம்** வெளியூர் தொடர்புகள் அனுகூலம் தரும், பெற்றோர் மீதான அக்கறை கூடும், கல்வி நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், பயணங்களால் பலனுண்டு.

**கடகம்** பயணங்களால் பலனுண்டு, கொடுக்கல் வாங்கல்களில் கவனம் தேவை, விருப்பங்கள் நிறைவேற இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், போசன சுகமுண்டு

**துலாம்** குடும்பத்தினரின் ஒத்துழைப்பால் தொழில் முன்னேற்றம் காணும் நாள், பிரியமானசிலரின் சந்திப்பு இடம்பெறலாம், முத்தான வாய்ப்புக்கள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.

**மகரம்** நட்பு வட்டம் விரிவடையும் நாள், தொழிலில் எதிர்பார்த்த உதவிகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, குடும்பத்தில் மகிழ்ச்சி தரும் சம்பவங்கள் இடம்பெறலாம்.

**ரிஷபம்** தன்னம்பிக்கையுடன் செயற்பட்டு முன்னேற்றம் காண வேண்டிய நாள், சுப நிகழ்வுகளில் புதியவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், வழிபாடு குதூகலம் தரும்.

**சிம்மம்** தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், தேவையற்ற மனக்குழப்பங்களை தவிர்ப்பது நல்லது, காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும் நாள், சயன சுக குறையுண்டு.

**விருச்சிகம்** சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், புதிய சொத்துக்களை வாங்கும் எண்ணம் உருவாகும், விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு.

**கும்பம்** நம்பிக்கைகள் நடைபெற வழிபாட்டை மேற்கொள்ள வேண்டிய நாள், ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், வெளிவழி ஒத்துழைப்புக் கிடைக்கும்.

**மிதுனம்** வழிபாடு காரிய வெற்றி தரும், உன்னதமான வாழ்க்கைக்கு அடித்தளம் அமைக்கும் நாள், நாவன்மையால் நல்ல பெயர் கிடைக்கும், பணப் புழக்கம் அதிகரிக்கும் நாள்.

**கன்னி** வழிபாட்டில் நம்பிக்கை கூடும், உறவுகள் வழியில் இனிய சம்பவமொன்று இடம்பெறலாம், செல்வ நிலை உயரும் நாள், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள்.

**தனுசு** காரிய வெற்றிக்கு இஷ்ட தெய்வத்தை வழிபட வேண்டிய நாள், வார்த்தைகளில் நிதானம் தேவை, உடல் ரீதியான உபாதைகள் ஏற்பட்டு உற்சாகம் குறையலாம்.

**மீனம்** புண்ணிய காரியங்களில் ஆர்வம் கூடும், தொலைபேசி வழியில் பொன்னான செய்திகள் வந்து சேரலாம், பெரிய மனிதர்களின் தொடர்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உழைப்பை நம்பு ஆனால் கடவுளை மறக்காதே



# நல்லூர் இரதோற்சவ சிறப்பு மலர் - 2025





# எங்களுக்கோர் தீர்வு கொண்டு நல்லூரான் தேரேறி வருகிறான்



சரித்திரப் பிரசித்தி பெற்ற நல்லூர் கந்தசுவாமி ஆலய மகோற்சவங்களில் சிறப்பு உற்சவமாகிய இரதோற்சவம் இன்று (21.08.2025) வியாழக் கிழமை பக்தி பூர்வமாக நடைபெறுகின்றது. இலட்சோப இலட்சம் மக்கள் நல்லைக் கந்தனின் தேர் பவனியில் கலந்து கொள்கின்றார்கள். அவன் திருவருளுக்கு பாத்திரமாகி நாலா திசைகளிலும் தேரேறி வருகின்ற ஆறுமுகப்பெருமானை வழிபடுகின்றார்கள்.

**தேரேறும் ஆறுமுகப் பெருமானின் அருள்நலம்**

முத்தமிழால் வைதாரையும் வாழ வைப்பவனாக வலிமையும் அழகும், அருளும், அன்பும் பொருந்திய பெருங் கடவுள் என கந்த புராண காவிய நாயகனாக " சூரனுடலற வாறி சுவறிட வேலை விட வல பெருமாள்" என திருப்புகள் நாயகனாக தாரகன், சிங்கன், சூரன் செருக்கடக்கிய செம்மலாக சுற்றி நில்லாதே பகையே துள்ளி வருகுது வேல் எறை வரிகளுக்கு இன்று தனிப்பெரும் தெய்வமாய் உன் மயில் பயந்த இலருசியமாக சரவணத்தில் உதித்த ஆறுமுகனாக திருத்தணிக, பழனி, திருச்செந்தூர் திருவாவினன் குடி, திருச் சீரலைவாய், திருப்பரங்குன்றம் என்னும் ஆறுபடை வீடுகளிலும் அமர்ந்தருள் புரியும் ஈசனாய், அழகிய சித்திரத் தேரிலே ஆறுமுகத்தோடு அபயகரம் காட்டி தேறுதலைத் தந்து தேசநலன் காக்க நல்லூரான் தேரோடு வருகின்ற திருக்காட்சியாக அமைகின்றது.

**"நல்லையம்பதியில் இந்திர விழா"**

இன்று நல்லையம்பதியில் இந்திர விழாப் போலக் காட்சியளிக்கிறது. எந்த மயமும் கந்த மயமாகவே இருக்கிறது.

முருகப் பெருமான் தன்னுடைய ஆறுமுகக் கோலத்துடன் தேரேறி எழுந்தருளி வருகின்றான்.

சிவபெருமானுடைய ஐந்து முகமும் உமாதேவியாரின் ஒரு முகமும் சேர்ந்து சிவனும் சக்தியும் கலந்த ஒரு திருவுருவமாக ஆறுமுகப் பெருமான் தோன்றினான் என்பது நன்று.

இறைவன் தன்னுடைய ஐந்து முகங்களையும் அதோ முகத்தையும் சேர்ந்து ஆறுமுக நாதனாக திரு அவதாரம் செய்தான் என்பது மற்றொன்று நான்கு திசைகளாகிய இடங்கள், மேல், கீழ் என்ற இரண்டு ஆகிய ஆறு இடங்களிலும் எம்பெருமானுடைய திருவருட் பார்வை செல்கின்றது. என்பதை அவனுடைய ஆறு திருமுகங்களும் நமக்குச் சொல்கின்றன.

**" ஆறுமுகத் தத்துவம்"**

மனிதனுடைய உடம்பிலுள்ள மூலாதாரம் சுவாதிஷ்டானம், மணிபூரகம், அநாகதம் விசுத்தி, ஆஞ்ஞை என்ற ஆறு ஆதாரங்களிலும் ஆறுமுகப் பெருமான் தனித் தனியாக நின்று பாதுகாக்கிறார்.

யோகிகள் அந்த ஆறு ஆதாரங்களில் அவனுடைய திருமுகத் தரிசனத்தைப் பெறுகிறார்கள்.

ஆறுமுகத் தத்துவம் மிகப் பழமையானது காலத்திற்கும் உரியது. அதுவே ஆதியானது அந்தமானது இன்னொரு வகையாகச் சொல்லப் போனால் ஆதியும் அந்தமும் அற்றது. இத்தகு பெருமைகளைக் கொண்ட ஆறுமுக சுவாமியே இன்று அடியார்களை அரவணைத்து காத்து இரட்சிப்பதற்காக தேரேறி வருகின்றான்.

**" நல்லூர் மூலஸ்தானத்தில் வேல்"**

வீர வேல் தாரை வேல் விண்ணோர் சிறை மீட்ட தீரவேல் செவ வேடிருக்கை வேல் வாரி

குளித் வேல் கொற்ற வேல் சூர் மார்புங்குன்றும் துளைத்த வேல் உண்டே துணை.

முருகனுடைய திருக் கரத்தில் இருப்பது வேல். இது ஞானசக்தி வேல் ஆகும்.

அஞ்ஞானப் பகையை வெல்ல ஞானவேல் தாங்கியுள்ளான் முருகன். தனி வழி நடக்கும் அன்பர்களுக்கு வலப்புறத்தும், இடப்புறத்தும், முன்னும் பின்னும் எங்குமாகி இரவு பகலில் துணையாக விளங்குவது வேல் என்கிறார் குமரகுருபரர். எங்களுக்கு ஒப்பற்ற துணையாக வருவது வேல். வேலின் பெருமையினை ஞானியாரடிகள் கந்தர் சஷ்டி சொற்பொழிவுகள் எனும் நூலில் விரிவாகக் கூறியுள்ளார்.

**தேரின் மகிமை**

உற்சவம் இறைவனது ஐந்தொழிலின் தத்துவத்தை உள்ளடக்கியுள்ளது. படைத்தல், காத்தல் , அழித்தல், அருளல் மறைத்தல் ஆகிய ஐந்தொழில்களின் உண்மைகளைப் புலப்படுத்தி நிற்பது இவ் வருடாந்த உற்சவமாகும்.

ஒரு ஆலயத்தில் தேர்த்திருவிழா என்றவுடன் அக்கிராமமே விழாக்கோலம் கொண்டு விடுவதோடு, மக்களது உள்ளங்களிலும் புதுப் பொலிவு பெற்று வருகின்றன.

சிறியோர் முதல் பெரியோர் வரை எவ்வித வேறுபாடுகளுமின்றி எம்பெருமான் தேரேறி அருள் பாலிக்கும் தெய்வீகக் காட்சியில் இலயித்துவிடுவர்.

மகோற்சவத்தில் சிறப்பிடம் பெறும் தேர்த்திருவிழா இறைவனுக்குரிய சிறந்த தொரு இராஜோபசாரமாகும்.

இறைவனது நல்லைக்கந்தனது திருமேனியைத் தாங்கி இத்தேரானது ஆலய வீதியில் அசைந்தாடிச் செல்கின்றது. ஊர்கூடித் தேரிழுக்கலாம். என்ற முதுமொழிக் கேற்ப அனைத்து மக்களும் எத்தகைய வேறுபாடுகளுமின்றி வடந்தொட்டு தேரை இழுத்து வருவது ஓர் உன்னதமான காட்சியாகிறது.

இன்று நல்லையம்பதி இந்திர விழாவாக காட்சியளிக்கின்றது. நல்லூர் பூலோக கைலாசமாகவே காட்சியளிக்கிறது.

உலகமெல்லாம் வாழும் முருக பக்தர்கள் இன்று நல்லை முருகப்பெருமானின் அருள் நலத்தை எண்ணி வியந்து பேருவகை அடைகிறார்கள். எல்லாம் வல்ல நல்லைக் கந்தன் நிரந்தர மானதோர் தீர்வினை அமைதியான சமாதான வாழ்வினைத் தந்தருள வேண்டுமென இத் தேர்திருவிழாவில் நல்லூரானை வேண்டி பிரார்த்திப்போமாக.

**மதுரகவி.காரை.எம்.பி. அருளானந்தன்.**


சிவனின் மைந்தனே! விநாயகனின் தம்பியே!
எமக்கு விடிவு தரும் தமிழ்க்கடவுளே கந்தனே போற்றி போற்றி



PES பெட்டா எசன்ஸ் சப்ளையர்ஸ்



ஐஸ்கிறீம், குளிர்பானம், கேக் வகைகள், பிஸ்கட், இனிப்பு, பீடா ஆகியவை தயாரிப்பதற்கு வேண்டிய சகல மூலப்பொருட்கள் மற்றும் ஊதுபத்தி, சாம்பிராணி, விளைவு சூடம், வாசனைத் திரவியங்கள், ஆயுள்வேத மருந்து வகைகள் தயாரிக்கும் மூலிகை வகைகள், குங்குமம், குங்குமப்பூ, எண்ணெய், நெய், மற்றும் சாப்பாட்டு இரசாயனப் பொருட்கள், பிஸ்கட், சொக்லேட், ரொபி வகைகளுக்கும் நாடவேண்டிய ஒரே இடம்

021 222 2386 இல.104, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

பேப்பர் மேர்ச்சன்ட், மலிபன், பிஸ்கட், பால்மா முகவர் சகலவிதமான பேப்பர் வகைகளையும் அச்சகத்துக்குத் தேவையான மை வகைகளையும் வேண்டிய அளவிலும்

◆போஸ்டர் பேப்பர் ◆ரைப்பிங் சீற் ◆ பிறிஸ்டல் போட் ◆ நியூஸ் பிறிண்ட்

◆ பாங் பேப்பர் ◆ பரிசுப் பேப்பர் ◆ பொக்ஸ் போட்






மற்றும் பாடசாலை, அலுவலக காகிதாதிகள் உபகரணங்களையும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்

(C-3693)

இல.152, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம். 021 221 9325


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

தங்க நகை உலகில் மங்காப் புகழ்பெற்ற

# கல்யாணி நகை மாளிகை


KJ

## KALYANI JEWELLERY

**Manufacturers of Gold Jewels**

இன்பம் பொங்கும் உங்கள்
இல்லத் திருநாட்களில் கல்யாணியின்
தங்கம் காவியமாய் மிளிர்ந்திடும்





நல்லூரான்
திருவடியை
நாளும்
தொழுதாய்
பொல்லா
வினையெல்லாம்
பறந்தோடும்
அவன்
அருள் நாளும்
கிடைத்துவிடும்




இல. 133B மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 433 4009 0777 840379

**கல்யாண் தங்க அடைவு**

இல.121, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்.

021 430 5005 074 021 4111

**தங்க அடைவு கடை சேவை**

NTN இல.174A, பாங்ஷால் வீதி,
சின்னக்கடை, யாழ்ப்பாணம்.

074 051 4131 077 784 0379

(- 3697)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஊர்கூடி கந்தன் தேர்வடம் பிடிப்போம் வாரீர்...

MODERN ELECTRICALS (PVT) LTD

# MODERN
## ELECTRICALS (PVT) LTD


INFINITY ELECTRICAL SOLUTIONS

உங்கள் இல்லங்கள் வண்ணமயமாய் மின்னிட உலகத் தரம் வாய்ந்த

LIGHTING ELECTRICAL INDUSTRIAL

என்பவற்றுக்கு எம்மை நாடுங்கள்



MODERNELECTRICALS.ME@GMAIL.COM

JAFFNA : NO/88 PALALY ROAD,ILLUPPAYADY JUNCTION,JAFFNA 021 223 2558 077 542 1769

KILINOCHCHI : A9 ROAD,KARADIPOKKU JUNCTION,KILINOCHCHI 021 228 6558 077 782 0926

(C-3688)

# Vani Tex
## வாணி ரெக்ஸ்



ஆண்களுக்கான

சேட், ஜீன்ஸ், ரீ - சேட், வேட்டிகள், சரங்கள்

பெண்களுக்கான

சாறிகள், பட்டுப்புடவைகள், பஞ்சாபி, டொப், லெக்கின்ஸ், ஸ்கேட், பிளவுஸ்கள், சிறுவர்களுக்கான ஆடைகள்

அனைத்தும் ஒரே கூரையின் கீழ் நியாயமான விலையில் பெற்றுக்கொள்ள நாடவேண்டிய ஒரே இடம்

சுட்டபழம், சுடாத பழமென்று ஔவைக்கு
அறிவுரை சொன்ன வேலவனே உன் திருவடி
நாடிவந்த எமை காத்தருளடா முருகா!

இல. 81, நவீன சந்தை, யாழ்ப்பாணம்.

021 222 5578 | 021 222 9286 | 0777 488 099

(C-3694)

தந்தைக்கு உபதேசம் செய்தவனே முருகா!
தரணியில் எமைக் காத்திடவே வாடா அழகா!
நல்லைப் பதியிலே எமக்கருள் தாடா மருகா!

# த.சங்கரப்பிள்ளை
## அன் சன்ஸ்



ஆள்பாதி ஆடைபாதி என்பார்கள்
உங்கள் அழகிற்கு இன்னும்
அழகு சேர்க்கும்
நவீன ரக ஆடைகளின்
சாம்ராஜ்ஜியம்

இல.21, நவீன சந்தை
மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 222 9965

(C-3686)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மங்கையர் மனங்கவரும் தங்க நகைகளின்
தரம்மிக்க கைராசி நிறுவனம்
உங்கள்

NSR JEWELLERY







வேலெடுத்து முருகா!
எம் வினை தீர்ப்பாய் குமரா!
தேரிழுக்க வந்தோம்
எமக்கருள் தா
நல்லைக்கந்தா!

NSR ஜுவல்லறி
தரம்மிக்க தங்க நகைகளில்
தரணி போற்றும் உங்கள் ஸ்தாபனம்

இல.131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2809 077 641 7679

(C-3701)


அழகென்ற சொல்லிற்கு முருகா!
உன் அருளின்றி உலகிலே பொருளேது முருகா!

RANA ELECTRONICS



Dealers in Electronics & Electrical

உங்கள் வீட்டிற்குத் தேவையான
அனைத்து வீட்டு மின் உபயோகப்
பொருட்களையும் உயரிய தரத்துடன்
நீண்டகால உத்தரவாதத்துடனும்
மிக மிக மலிவாகவும் பெற்றுக்கொள்ள
எமது காட்சியறைக்கு நாடுங்கள்!



இல.92, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5105 077 373 1019

(C-3696)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கணனி உலகின் முதல்தர அனுபவம் வாய்ந்த நிறுவனம்

UNITY COMPUTERS

# Unity PC Systems

- Printers / Scanners / Accessories
- CCTV Security Alarm Systems
- UPS Computer Accessories
- Desktop & Laptop Computer
- Multimedia & Other

ALL - IN - ONE IT SOLUTION

Hotline 077 3446 194



உள்ளத் தூய்மையின் உன்னதம்
கந்தன் இரத வடம் பிடிப்போம் வாரீர்

இல.74, இலுப்பையடிச்சந்தி,
பலாலி வீதி, யாழ்ப்பாணம்.

021 222 0666

0777 425 741

yathu31@gmail.com



(C-3689)

இல.394,1/1 காலி வீதி, கொழும்பு-06 011 236 1777 0777 890 532

---



கந்தா உனைக் காண உன் திருவடியை
நாடி வந்தோம்! எமக்கருள்வாய் முத்துக்குமரா!

தொன்று தொட்டுத் தொடரும்
எம் பாரம்பரியங்களைக் கட்டிக் காப்போம்

# வினோ நகைப்பூங்கா



22 கரட் தங்க நகைகளை உத்தரவாதத்துடன்
குறித்த தவணையில் உங்களிடம் சேர்த்து உங்கள்
வீட்டு நிகழ்வுகளை மகிழ் மயமாக்க எம்முடன் இணைந்திருங்கள்

"தங்கம்
வாழ்க்கையின்
உன்னத
தருணங்களை
நினைவூட்டும்"




(C-3703)

இல. 177, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 5394, 021 222 9494, 074 209 9494

---

## நல்லூர் திருவிழாவை முன்னிட்டு விஷேட கட்டணக்கழிவுகள்!

EP Academy என்பது இலங்கையின் யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள முன்னணி கல்வி நிறுவனம் ஆகும். 2014 ஆம் ஆண்டில் நிறுவப்பட்ட எமது நிறுவனத்தின் மூலம் நாம் மாணவர்கள் மற்றும் தொழில் முனைவோரின் தொழில் முன்னேற்றத்தை ஆதரிக்கும் வகையில், பன்னாட்டு அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் பாடநெறிகள் மற்றும் பயிற்சி திட்டங்களை பல்வேறு துறைகளில் வழங்கி வருகின்றோம்.

**Five Star Academy Services**

- ★ Professional courses
- ★ Exams centre
- ★ Employment (Local & International)
- ★ Overseas Student & Work visa
- ★ Community support

EP Academy
Every Little Success
Since 2014

**Professional Education and Development Training Centre**

# British Council IELTS Registration Centre
# PTE Academic Certified Associate
# Registered CIMA Tuition Provider
# PearsonVUE Exam Centre

நாம் கடந்து வந்த பாதையின் சில பதிவுகள்....



இக் கூப்பனை பூர்த்திசெய்து எமது காரியாலயத்தில் ஒப்படைப்பதன் மூலம் நீங்கள் விரும்பும் கற்கை நெறிகளுக்கு விசேட கட்டணக் கழிவுகளையும் மற்றும் பெறுமதி மிக்க பரிசில்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

**Gift Voucher** EPAXXX

பெயர் :..........................................

தொலைபேசி இல :..........................

முகவரி :..........................................
..........................................

### PROFESSIONAL COURSES

**துறைசார் விரிவுரையாளர்களுடன் அரச அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் கற்கைநெறிகள்**

- CIMA
- Artificial Intelligence
- Aircraft Engineering
- IT NVQ 3
- Spoken English
- Hotel Operations
- Cloud Computing - AWS/AZURE

### ENGLISH LANGUAGE EXAMS

**உங்கள் வெளிநாட்டுக் கனவினை நனவாக்கிட 100% உத்தரவாதத்துடன்....**

- IELTS : Academic | General | UKVI | A1 | B1
- PTE : Academic, Core, UKVI - PTE Home A1, A2 & B1

வார மற்றும் வார இறுதி நாட்களில் வகுப்புகள்

### STUDENT VISA

**வெளிநாடுகளில் பட்டப்படிப்பு கனவினை நனவாக்க எங்களுடன் இணையுங்கள்**

- IELTS required or not, depending on the university
- English proficiency: C pass in English
- Completion of OL or AL examination
- Scholarship opportunities available

### WORK VISA

UK இல் 05 வருட வேலைவாய்ப்பு அதன் பின்னர் PR இற்க்கு விண்ணப்பிக்கலாம்

**Career opportunities: Nurse | Caregiver | Chef**

- Professional advice for UK work permits
- IELTS UKVI required - Band 5.0 - 7.5
- Estimated costs: 9,400£

### PERSONALITY DEVELOPMENT CLUB

**எமது Personality development club இல் இணைந்து திறன்களை வளர்த்துக்கொள்ளுங்கள்**

- Confidence building & soft skills
- Public speaking & leadership training
- Career enhancement sessions

**தடைகளின்றி உங்களது இலக்குகளை அடைய...!**

மேலதிக தகவல்களுக்கு .........

077 628 4845

354, 1/1, Clock Tower Road, Jaffna
வெலிங்டன் சந்தியில் (லிங்கன் Cream house அருகில்)

www.epacademy.lk

EP Academy
Every Little Success
Since 2014

*நிபந்தனைகளுக்கு உட்பட்டது

எங்கள் ஆலோசகரை தொடர்பு கொண்டு இலவச ஆலோசனை பெறுங்கள்!

(C-3706)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சுஜீவா வைத்தியசாலை



(சுஜீவா தாய்மைப்பேற்று சித்த ஆயுள்வேத வைத்தியசாலை)

சேவை நேரம்-

காலை 08.00 –மதியம் 12.00 மாலை 03.00–06.00 (வெள்ளிக்கிழமை விடுமுறை)

தொடர்பு இலக்கங்கள் – 077 559 4147, 021 221 9611

வெளி மாவட்ட மக்கள் T.P இல் தொடர்பு கொண்டு வரவும்.

**1091(நாச்சிமார் கோவில் அருகாமை), K.K.S.Road, Jaffna.**

- இலங்கையில் குழந்தையின்மை, ஆட்டிசம்,தலைமுடி உதிரல் முதலிய மாற்ற முடியாது என கருதி கைவிடப்பட்ட வியாதிகளை நீக்குவதில் பெயர் பெற்று பயனடைந்தவர்கள் மூலமாக பிரபலமடைந்தது.

- வேறு எங்கும் வாங்க/பெற முடியாத எமது பரம்பரைக்கேயுரித்தான சித்த ஆயுள்வேத மருந்துகள், நுணுக்கங்கள்

- இலங்கையில் மட்டுமே காணப்படுகின்ற தாவர இனங்களில் மிகச்சிறந்த மருத்துவ குணம் வாய்ந்ததென பரம்பரை பரம்பரையாக அனுபவ ரீதியாக தெரிந்தெடுக்கப்பட்ட மூலிகைகள் மூலமாக தயாரிக்கப்படும் மருந்துகள்

- இலங்கை தமிழரசர் எல்லாள மஹாராஜாவின் அரசவையின் அனுராதபுர மஹா களத்தாவ நாகர் பரம்பரைக்குரிய 25 தலைமுறைக்கான வைத்தியர்கள் தந்தவை(வைத்தியர் சந்திரமாலா ஜெயலன் அவர்களின் தந்தை வைத்தியர் அமரர் க.ஓ.இராஜரட்ணம்- Regd 6067 அனுராதபுரத்தில் சிங்கள மொழியில் ஆயுள்வேத சர்வாங்க, விஷகடி அரச பதிவுபெற்றவர் அனுராதபுரத்தில் ராஜா வெதமாத்தயா என்றும் இராசமாணிக்கம் என்றும் வவுனியா செட்டிகுளம் ஈரற்பெரியகுளம் தருமபுரம் மற்றும் பாலிநகர் வவுனிக்குளம் பகுதியில் சுஜீவா வைத்தியசாலையை நிறுவியவர்)

- யாழ்ப்பாண அரசர்கள் செகராசசேகரன், பரராசசேகரன் முன்னிலையில் எழுதப்பட்ட செகராசசேகரம், பரராச சேகரம் வைத்திய நூல்களிலுள்ளவை

- ராஜவைத்திய பருத்தித்துறை முறை, காரைநகர்(சாமியார்-பரமசாமி) 7 வது பரம்பரை மருத்துவர்களின் முறைகள்

- இந்திய இலங்கை நூல்கள், சித்தர்கள் முனிவர்கள் மருத்துவர்கள் மற்றும் யாழ்ப்பாணம் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி ஆசான்கள் கற்பித்தவை பல பரம்பரை,பட்டதாரி மருத்துவர்கள் தந்தவை

- கிடைக்கப்பெற்ற ஓலைச்சுவடிகள் 24ஆவது, 6 ஆவது பரம்பரைகளுக்குரியவை, Dr.சந்திரசேகரம். DAMS கரவெட்டி, மருத்துவிச்சி அன்னம்மா மட்டக்களப்பு, நரம்படி நிபுணர் ஆ.பாலவிநாயகர் வட பழனி, இராசசேகரம்(துரை) பரியாரி யார் காரைநகர், Dr.A.சண்முகராஜா இளவாலை சுப்ரமணியம் பரியாரியார் மாசார்.

- அதிசிறந்த வைத்திய நுணுக்கங்கள், மருந்து செய்யும்முறைகள் நோய்தீர்ப்பதில் மிகச்சிறந்ததென தெரிந்தெடுக்கப்பட்ட மருந்துகள், தனி/கலவை மூலிகை பிரயோகங்கள் -நசியம், வேது (ஆவிபிடித்தல்), தூமக்(புகை) குளியல், சிரோதாரா (தலை அபிஷேகம்), நீராவி இயந்திர குளியல், மற்றும் மூலிகைக்குளியல், ஒத்தணம்,தைலம்மற்றும் சாறுகள் தேய்த்தல், பூசுதல், நீவுதல், சுளுக்கெடுத்தல், உளுக்கு பார்த்தல், வர்ம புள்ளித் தாக்குதலின் பாதிப்பை சரிசெய்யும் நரம்புப் புள்ளிகள் தூண்டல் (நரம்படி இளக்குமுறை), பத்து, புக்கைகட்டுதல், வியாதிகளைத் தடுக்கும் யோகாசனங்கள், நிற சிகிச்சைகள், மனோதத்துவ நோக்கு வர்ம சிகிச்சைகள், வியாதிகளை உண்டாக்கும் நவக் கிரகங்களின் சஞ்சார இடமாற்றங்களின் கதிர்வீச்சுகளின் தாக்கங்களால் உண்டாகிய நோய்களை நீக்கக்கூடிய உரிய நவரத்தினங்களை, நிறகற்களை, உருத்திராட்சைகளை அணியச் செய்தல்/நவதானியங்களை உண்ணல்/ நவசமித்துக்களாலாக்கப்பட்ட குடிநீர், புகைகிளப்பல் /நவநிறங்களை பாய்ச்சுதல்/ ஏற்கனவே நோய் நீக்கிய ஒலியலைகளின் உச்சரிப்புக்கள் (மந்திரங்கள்),மூச்சுப் பயிற்சிகள், (முத்திரைகள்),உணவுமுறைகள்.

மாறாத நோய்களுக்கு நன்கு செயலாற்றகூடியதென தெரிந் தெடுக்கப்பட்ட சித்த ஆயுர்வேத மருந்துகளையும் நுணுக்கங் களையும் பயன்படுத்தி நோய்களை நீக்குவதற்கு இலங்கை யிலே மாபெரும் வெற்றிகண்ட உள்நாட்டுமருத்துவம்

**குழந்தையின்மைக்கான மருத்துவம்**

- இவ் வைத்தியசாலை நூற்றுக்கணக்கான குழந்தைகளை உருவாக்கி பிரபல்யம் அடைந்துள்ளது.

- சிகிச்சைகளால் குணப்படுத்த முடியாமல் கைவிடப்பட்டு குழந்தைகளுக்கு ஏங்கும் தம்பதிகளுக்காக இங்கு தீர்க்கப்படும் ஆண்,பெண் இருபாலருக்குமான குறைபாடுகள்

## பெண்களுக்கானது

- பரம்பரை / பிறவிக்குறைபாடுகள் / வயது வந்தும் பருவமடையாமை / மாதவிடாய் குறித்த காலத்தில் வராமை/அதிக மற்றும் குறைந்த குருதி போக்கு /வயிற்று வலி / இயல்புக்கு மாறான கருப்பை / சூலக கருப்பை கட்டிகள் / முட்டை பலோப்பியன் குழாய் / கருப்பை கழுத்து குறைபாடுகள் / கொழுப்பு / நோய்த் தொற்று / கருச்சிதைவு / கருக்கலைப்பு / மற்றும் அறுவைச் சிகிச்சை என்பவற்றால் உண்டான அழற்சிகள் /வெள்ளைபடல் / உளவியற்காரணங்கள் ஓமோன் சமச்சீரின்மை / பெண்ணில் ஆண் இயல்பு (முக உரோமம் )/உடல் உறவில் நாட்டமின்மை / உடல் சூடு / உடலுறவில் வலி,நோ,எரிவு / மார்பக வளர்ச்சி குறைபாடு

**பொறுப்பு வைத்தியர்**
**Dr.திருமதி ஜெ.ஜெயலன் (D.A.M.RIMP)**

25 ஆவது அனுராதபுர மஹா களத்தாவ (நாக -இராஜ) பரம்பரை மருத்துவர், முன்னாள் விரிவு ரையாளர் லங்கா சித்த ஆயுள்வேத மருத்துவ கல்லூரி

## ஆண்களுக்கானது

- விந்து இல்லாமை, எண்ணிக்கை குறைவு, உருவ அமைப்பு பிழைகள், ஓடும் திறன் குறைவு / நோய்தொற்று / விதையில் தடித்த நாளங்கள் (Varicousvein) சுருங்கிய குழாய்கள் / நோயெதிர்ப்பு பொருள் / ஆண்குறி சிறுத்தல்/ விறைப்புத்தன்மை குறைவு / விரைவான விந்து வெளியேற்றம்/ சிறுநீரில் அல்லது தன்பாட்டில் விந்து வெளியேறுதல்.

**பொறுப்பு வைத்தியர்.**
**Dr.ஜெ.ஜெயலன்(D.A.M.RIMP)**
**7 ஆவது பரம்பரை மருத்துவர்.**

**மேலும் மிக சிறப்பாக நீக்கப்படும் ஏனைய நோய்கள்**

1. ஓட்டிசம் சிறுபிள்ளைகளுக்கு ஏற்படும் புத்திக்குறைபாடு, பேச்சுவராமை, அதீத செயற்பாடு முதலியவற்றுக்கு
2. வயிற்றுப்புண், மூலநோய், மலச்சிக்கல்
3. சிறுநீர்ப்பை கல், தலைமுடி உதிர்வு, புழுவெட்டு, இளநரை
4. வாதம், முதுகுவலி, முழங்கால் வலி, குதி வாதம், மூட்டுவீக்கம், நோ
5. உடற்பருமன், அதிக எடை , உடல் மெலிவு,
6. முட்டு, மாறாச்சளி
7. தோல் நோய்கள் (சொறியாசிஸ்-செதில்படை)

(C-3705)



எமது வைத்தியசாலையின் சிகிச்சையால் உருவான குழந்தைகளுக்கு பரிசு வழங்கல் 2011 நிகழ்வு ஆயுள்வேத அமைச்சர்



எமது சிகிச்சையால் உருவான குழந்தைகளுக்கு பரிசுவழுங்கல் 2017 நிகழ்வு வடமாகாண ஆயுள்வேத ஆணையாளர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கற்பனை என்றாலும் கற்சிலை என்றாலும் கந்தனே உனைமறவேனே!

சிறி மீனாட்சி நகை அகம்

Sree Meenakchi Nagai Aham

22 கரட் தங்கப்பவுண் நகை வியாபாரம் தரம்குன்றா தங்க நகைகளின் தரணி உங்கள் சிறி மீனாட்சி நகையகம்

(C- 3704)

T.P: 021 222 6109

இல.177 B, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

நல்லையில் வீற்றிருந்து அடியவர்க்கு நலமளிக்கும் செந்தமிழ் முருகா! உன் நாமமே எமது மொழி சிறிமுருகா!

ஸ்ரீ முருகன்

SRI MURUGAN

Communication Agency post office

உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை, Western Union மூலம் அனுப்பிய பணத்தைபெற நீண்ட கால அனுபவமும், அதிவிரைவு சேவையுடன் கூடிய நம்பகமாக பாதுகாப்பான சேவைகள். இவை அனைத்தையும் ஒரே கூரையின் கீழ் பெற்றிட நாடுங்கள்.

(C- 3698)

WESTERN UNION MONEY TRANSFER | DHL | Ria | DEVELOPMENT LOTTERY Enriching Your Life | aramex | MMBL Money Master | Dialog | MoneyGram

Email: Srimurugan09@gmail.com, srimurugan303@gmail.com

No.303, K.K.S Road, Jaffna, Srilanka

0094 21 222 2690 / 5392

0094 21 222 3214

தேர்வடம் பிடிப்போமே கந்தன் அருள் ஆசியைப் பெறுவோமே!

லலிதா ரெக்ஸ்

இல.5,6. நவீன சந்தை யாழ்ப்பாணம்.

021 222 5260

ஸ்ரீ லலிதா பெஷன்

இல.165,மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.

021 222 4003

(C- 3695)

பட்டுப்புடவைகள், சாறிவகைகள், பஞ்சாபி, வேட்டி, சாரம், துணிவகைகள் அனைத்தையும் எம்மிடம் சிறந்த தரத்திலும் மலிவு விலையிலும் பெற்றுக் கொள்ள நாடுங்கள்

# நல்லூரான் திருவடிக்கு... இன்று 24 ஆம் நாள் திருவிழா



## கா! நல்லைக் குமரேசனே!

உருவமிலை அருவமிலை ஒளியுமிலை இருளமிலை
ஒன்றிலும் ஒன்றாமலே
உருகுமடி யார்களின் உள்ளுணர்வில் மட்டுமே
உனைக்காட்டும் மூலமுதலே
மருவுந்தரு வாகவே பெருகுமரு ளருவியென
மனதிலுற வாடும்தகையே!
பொருந்தியெமைக் காக்கவே விரைந்துவரு வேலவா
பொழில்நல்லைக் குமரேசனே!

கலாபூஷணம்,
சந்தக்கவிஞர்.நவ.பாலகோபால்.

## தேரேறும் கந்தன்

பிட்டுக்கு மண் சுமந்தவன் மைந்தா நல்லைப்பதிவாழ் கந்தா
ஔவைக்குபதேசம் செய்தவா அந்த அருணகிரியையும் ஆட்கொண்ட ஆறுமுகா
அல்லற்படும் எமக்கு ஆறுதலைத் தந்திடுவாய் அழகேசா
தேவரைக் காத்திடவே சூரரை வதம் செய்த சுந்தரா
பக்தியுடன் பாவிசைத்தே ன்பாதம் பணிந்தோம் பரமனின் திருமகனே
நீயும் ரதமேறியே எமை ரட்சித்துக் காத்திடுவாய் கார்த்திகேயா.

மாவையூர் நேசன்.

## சிங்கார முருகா தேரேறி வருக!

தீராத வினை தீர்க்கும் சிங்கார முருகா தேரேறி வருக!
சிறை காத்த தேவர் குறைதீர்த்த முருகா தேரேறி வருக!
ஆறுமுகராஜனே அனைத்துலகும் காத்திடவே தேரேறி வருக!
அட்சாணி நாதனே அடியாரைக் காத்திடவே தேரேறி வருக!
துன்பம் துடைத்தருள் சுந்தரிகரிருவரோடும் தேரேறி வருக!
பக்தி நெறி காத்திட பந்தவினை ஓட்டிட தேரேறி வருக!
பஜனையுடன் நாதமழை வீதியிலே முழங்கிடத் தேரேறி வருக!

திருமதி. செல்வராணி. பாக்கியநாதன்,
ஓய்வுநிலை நூலகர், வட்டுக்கோட்டை.

## நல்லூரான் தேர் காண்போம்...!

மேதினியில் மேன்மையுள நல்லைத் திருப்பதியின்
மேலான தெய்வமாம் கந்தப் பெருமான்
வீதிவலம் வந்தடியார் துயரகற்றத் திருவுளமாய்
விண்ணோரும் வியப்புறும் வித்தையெனும்
நூதனமாய் எழிலமைந்த தேரதனில் பவனிவரும்
நேரிய காட்சியதின் பேரழகை
காதலோடு கண்டுள்ளம் களிப்புறுவோம் இன்று

இரா.தில்லைராஜன்

## நல்லூர்த் தேரடிக்கு வருகின்றார்

ஆர்வமுடன் உழைத்து ஊக்கமுடன் பயிரிட்டு
எம்மவர்க்கு உணவளிக்கும் ஏராளரும்
ஊரார்க்கும் உறவினர்க்கும் உருக்கமுடன் உதவும்
உயர் உள்ளம் படைத்தோரும்
தேரோட்டத் திருநாளில் திருவீதிவழி நல்லூர்த்
தேரடிக்கு வருகின்றார் தூய்மையுடன்
ஆர்வமுடன் அனுதினமும் அணுகும் அடியார்க்கு
ஆறுமுகன் தேறுதல் அளித்திடுவார்.

க.அருமைநாயகம்
குளப்பிட்டி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 1,338 வெளிநாட்டவர்களுக்கு இதுவரை சாரதி அனுமதிப்பத்திரம்

(கொழும்பு)

கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் நிறுவப்பட்ட மோட்டார் போக்குவரத்துத் திணைக்களத்தின் அலுவலகம் திறக்கப்பட்டதிலிருந்து மொத்தம் 1,338 சாரதி அனுமதிப் பத்திரங்கள் வெளிநாட்டினருக்கு வழங்கப்பட்டுள்ளன.

ஆகஸ்ட் 3 ஆம் திகதி அமைக்கப்பட்ட பிரத்தியேக உரிமம் வழங்கும் கருமபீடம், இலங்கைக்கு வருகை தரும் வெளிநாட்டினரின் வசதிக்காக அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆகஸ்ட் 3 முதல் 17 வரை மொத்தம் 1,338 சாரதி அனுமதிப் பத்திரங்கள் இங்கு வழங்கப்பட்டன.

முன்னதாக, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் சாரதி அனுமதிப் பத்திரங்களை பெற வெராஹெராவில் உள்ள அலுவலகத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. இதேவேளை, நாட்டிற்கு வருகை தரும் வெளிநாட்டினருக்கு 2,000 ரூபாய் என்ற குறைந்த கட்டணத்தில் சாரதி அனுமதிப் பத்திரங்களை வழங்குவது தொடர்பில் இலங்கை சுற்றுலா சாரதிகளின் ஒன்றியம் எதிர்ப்பு வெளியிட்டுள்ளது. குறித்த நடைமுறை காரணமாக, அந்த தொழிலை நம்பியிருப்போர் பாரிய அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளதாக அந்தச் சங்கத்தின் பிரதிநிதி அமில கோரலகே குறிப்பிட்டுள்ளார். (நி)

# 100 தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு நடவடிக்கை



(கொழும்பு)

தொலைபேசி தொடர்பாடல் மோசமான நிலையில் காணப்படும் பகுதிகளை உள்ளடக்கி 100 தொலைத்தொடர்பு கோபுரங்களை நிர்மாணிப்பதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

கிராமத்திற்கு தொடர்பாடல் வேலைத் திட்டத்தின் கீழ் இந்த நடவடிக்கை முன்னெடுக்கப்படவுள்ளது.

கிராமத்திற்குத் தொடர்பாடல் வேலைத் திட்டத்தின் கீழ், தொலைத்தொடர்பு கோபுரம் நிர்மாணிப்பதற்கான செலவில் 75 வீதம் தொலைத்தொடர்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழுவினால் ஏற்றுக்கொள்ளப்படும்.

கிராமிய பிரதேசங்களிலும் தொலைபேசி தொடர்பாடல் மோசமான நிலையில் காணப்படும் பகுதிகளிலும் இடையூறுகளை நீக்குவது இதன் நோக்கமென டிஜிற்றல் பொருளாதார விவகாரங்கள் பிரதியமைச்சர் எரங்க வீரரத்ன தெரிவித்தார். (நி)
















# ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

**வலிகாமம்தென்மேற்கு பிரதேச சபை : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம்**
**விண்ணப்பதாரரின் பெயர் : குணரத்தினம் மகள் கஜரூபனா**
**ஆதனப்பதிவேட்டின் படி பெயர் :சொந்தக்காரர்**

ஆதன இல 12/3 வீதி சகாயபுரம் பாலக்காட்டு இணைப்பு வீதி, வட்டாரம் - 01

வட்டாரம் 01 சகாயபுரம் பாலக்காட்டு இணைப்பு வீதி, ஆதன இலக்கம் **12/3** இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவிற்பற்று சிறுவிளான் இறை **"கோணாவளை"** எனும் பெயருள்ள நிலப்பரப்பு நான்கும் குழி ஒன்றும் (நில.பர.04 குழி.01) விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு **சோமசுந்தரம் தேவராஜா** அவர்களால் எழுதப்பட்ட 7833 ஆம் இலக்க 10.07.2017 ஆம் திகதிய உறுதி மூலம் கணேசானந்தம் கைம்பெண் சிவகாமி என்பவர்களால் குணரத்தினம் மகள் கஜருபனாவுக்கு அழியா நன்கொடை வழங்கப்பட்டது. இந்த ஆதனம் கணேசானந்தம் கைம்பெண் சிவகாமியினது சகோதரனுமான காலஞ்சென்ற சுவாமிநாதர் சிவகணநாதாவிற்கு 1922ஆம் ஆண்டு வைகாசி மாதம்22ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ஆறுமுகம் பொன்னம்பலம் முகதாவில் 7830ஆம் இலக்கத்தில் முடிந்த நன்கொடை மூலம் சொந்தமாகும்

**ஆதன விபரம்**

நில அளவையாளர் **S.மயூரன்** அவர்களால் வரையப்பட்ட 1004 ஆம் இலக்க 2024.01.21 ஆம் திகதிய நிலஅளவைப்படத்தின் பிரகாரம் நிலப்பரப்பு 04 குழி 8.138 வீடும் கிணறும் வான்பயிர் செய்பயிர்களும் ஆதனத்தின் எல்லைகள் பின்வருமாறு.

கிழக்கு - **கணபதி பெண் வள்ளியம்மையின் ஆதனமும் கையொழுங்கை முகப்பும்**
வடக்கு - **சரவணமுத்து ஆறுமுகத்தின் ஆதனமும்**
மேற்கு - **கதிரவேலு சாம்பசிவத்தின் ஆதனமும்**
தெற்கு - **சரவணன் பெண் சின்னம்மாவின் ஆதனமும்**

மேற்குறித்த ஆதனத்தை **குணரத்தினம் மகள் கஜரூபனா** என்ற பெயரில் சபையின் ஆதனப் பதிவேடுகளில் ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையைத் தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை,**
**மானிப்பாய்.**

(5092)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒரு அடிமைக்கு அவன் அடிமை என்பதை முதலில் உணர்த்து. பிறகு அவன் தானாக கிளர்ந்தெழுவான்.
~ டாக்டர் அம்பேத்கர்

வலம்புரி
TP : 021 222 3378
website : www.valampurii.lk

# எம்மையாளும் தலைவன் தேரேறி வருகிறான்

உலகில் எந்த சமயத்திலும் இல்லாத உன்னதம் எங்கள் ஈழத்து சைவ சமயத்துக்கு உண்டு.

ஆம், உலகெங்கும் மானிடர்களை மன்னராக ஏற்றுக் கொண்டு அவர்களைத் துதிபாடுகின்ற நடைமுறையே உண்டு.

இதற்குப் பிரிட்டன் நல்ல உதாரணம். மக்கள் வாக்களித்து அரசாங்கத்தைத் தெரிவு செய்தாலும் மன்னர் குடும்பம் என்ற அந்தக் கட்டமைப்பை பிரிட்டன் இன்றுவரை நிலைநிறுத்தி வருகிறது.

ஆம், எலிசபெத் மகாராணியார், அவருக்குப் பின்னர் அவரது மகன் சாள்ஸ் முடிக்குரிய மன்னராக உள்ளார்.

அந்த மன்னர் குடும்பத்தின் நிகழ்வுகள் என்றால் அதுவே பிரிட்டிஷ் மக்களின் பேசுபடு பொருளாகிவிடும்.

இதுபோல மத்திய கிழக்கு நாடுகளில் மன்னராட்சி காணப்படுகிறது. அந்த மன்னர்களைப் பார்ப்பதற்காக அந்நாட்டு மக்கள் இலட்சக் கணக்கில் கூடுவர்.

மன்னர் ஆட்சி இல்லாத மக்களாட்சியை உடைய நாடுகளில் அரசியல் தலைவர்களே அங்கு முதன்மைக்குரியவர்கள். மக்களின் மரியாதைக்குரியவர்கள்.

இதற்கு நம் அண்டை நாடான இந்தியாவும் விதிவிலக்கல்ல. இதை நாம் உன்னிப்பாகக் கவனித்தால், கடவுள் மறுப்புக்கொள்கையை உடைய திராவிட முன்னேற்றக் கழகமே தமிழகத்தில் ஆட்சி செய்கிறது.

அரசியல் கூட்டம் என்றால் – முதலமைச்சர் வருகிறார் என்றால், இலட்சோப இலட்சம் மக்கள் அங்கு கூடிவிடுவர்.

இதற்கு நல்ல உதாரணம் ஜெயலலிதா அம்மையார் தமிழக முதலமைச்சராக இருந்த போது, கும்பமேளாவில் நடந்த மகாமகத் திருவிழாவில் அவர் நீராடுவதைப் பார்ப்பதற்காகக் கூடிய மக்கள் தொகையும் அதனால் அங்கு ஏற்பட்ட விபரீதமும் தெரிந்தவையே.

இதற்கும் மேலாக, தங்கள் அரசியல் தலைவரின் மறைவை ஜீரணிக்க முடியாமல் தீக்குளிப்பவர்கள் எத்தனை எத்தனை.

இதை நாம் கூறும்போது தென்னிலங்கையிலும் அரசியல் கூட்டங்களுக்காகக் கூடுகின்ற சனங்களின் எண்ணிக்கையை, அங்கு எந்த வழிபாட்டு நிகழ்விலும் காணமுடியாது.

ஆனால் எங்கள் ஈழத்து மண்ணில்தான் அரசியலுக்குப் பின்னால் செல்வதற்கு மக்கள் கூட்டம் இல்லை.

அரசியல் தலைவர்களை எம் இனத்தின் தலைவர்களாகவும் நாம் ஏற்றுக் கொள்வதில்லை.

இதற்கெல்லாம் மூலகாரணம் எங்கள் ஆட்சித் தலைவன் – தமிழ் மக்களை ஆளுகின்ற மாமன்னன் முருகப்பெருமான் நல்லூர் இராசதானியில் இருந்து அரசாட்சி செய்வதாகும்.

அதனாலன்றோ தங்கள் தலைவனைப் பார்க்க நல்லூரில் இலட்சக்கணக்கில் மக்கள் சமய பேதமின்றிக் கூடுகின்றனர்.

ஆக, நம் மக்கள் ஏற்றுக் கொண்ட தலைவன் நல்லூர் முருகன்; தான் ஆளும் மக்கள் புடைசூழ, இன்று தேரேறி வருகின்றான். தேரேறி வரும் சண்முகப் பெருமானை கண்ணாரக் கண்டு ஒரு கணம் தரிசித்தால், அதுவே இப்பிறப்பின் பேறாம்.

# உறவுகளின் குடும்பங்களுக்கு எதிராக பயங்கரவாதத் தடைச் சட்டம் பயன்பாடு

## சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்திய துணைப்பணிப்பாளர் மீனாட்சி கங்குலி

(கொழும்பு)

இலங்கைப் பாதுகாப்புப் படையினர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்களைத் துன்புறுத்துவதாகவும் அவர்களுக்கு எதிராகப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தைப் பயன்படுத்துவதாகவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத்திற்கான துணைப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி நேற்று வெளியிட்ட அறிக்கையில் இந்த விடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தநிலையில் இலங்கையில் இடம்பெற்ற துஷ்பிரயோகங்கள் தொடர்பான ஆதாரங்களை சேகரித்துப் பகுப்பாய்வு செய்வதற்கும் நிலைமைகளைத் தொடர்ந்து கண்காணிப்பதற்கும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவை இலங்கை தொடர்பான தீர்மானங்களைப் புதுப்பிக்க வேண்டும் என்றும் அந்த அறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க, உரிமைகளை மதிக்கும் கொள்கைகளை ஏற்றுக் கொள்வதாக உறுதியளித்த போதிலும் அவை மிகக் குறைவாகவே உள்ளதாகவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் தெரிவித்துள்ளது.

காணாமல் ஆக்கப்பட்டவர்களின் குடும்பங்கள் தொடர்ந்தும் அச்சுறுத்தல்களை எதிர்கொள்வதுடன் இலங்கையில் நீதிக்கான வாய்ப்புக்கள் எப்போதும் குறைவாகவே உள்ளன என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உயர்ஸ்தானிகர் வோல்கர் அண்மையில் இலங்கைக்கு விஜயம்மேற்கொண்டு செம்மணி மனிதப் புதைகுழியைப் பார்வையிட்டமை தொடர்பில் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் அறிக்கையில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இந்தநிலையில் குறித்த விடயத்தில் உண்மையை வெளிக்கொணரக் கூடிய தடயவியல் நிபுணத்துவம் வாய்ந்த சுயாதீன விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என்றும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகம் வலியுறுத்தியுள்ளது.

பல தசாப்தங்களாக இலங்கையில் சுமார் 20 மனிதப் புதைகுழிகள் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவை தொடர்பில் ஒருபோதும் விசாரணைகள் இடம் பெறவில்லை என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பங்களையும் மனித உரிமைகள் பாதுகாவலர்களையும் புலனாய்வு அமைப்புகள் அச்சுறுத்தும் சம்பவங்கள் பதிவாகியுள்ளன.

சிறுபான்மை சமூகங்களைச் சேர்ந்தவர்களை தன்னிச்சையாகத் தடுத்து வைக்கவும் துன்புறுத்துவதற்கும் இலங்கை அதிகாரிகள் பயங்கரவாத எதிர்ப்பு அதிகாரங்களைப் பயன்படுத்துவதாகவும் சர்வதேச மனித உரிமைகள் கண்காணிப்பகத்தின் ஆசியப் பிராந்தியத் திற்கான துணைப் பணிப்பாளர் மீனாட்சி கங்குலி விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ம-7)

# முன்னாள் பொலிஸ்மா அதிபர் தேஷபந்து தென்னகோன் கைது

முன்னாள் பொலிஸ் மாஅதிபர் தேஷபந்து தென்னகோன் குற்றப் புலனாய்வுத் திணைக்கள அதிகாரிகளால் நேற்றுக் கைது செய்யப்பட்டுள்ளார்.

காலிமுகத்திடல் அரகலய மக்கள் போராட்டக்களத்தின் மீது தாக்குதல் நடத்திய சம்பவத்தின் சந்தேகநபராக அவர் சட்ட மா அதிபரால் பெயரிடப்பட்டுள்ள நிலையில் கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்தக் குற்றச்சாட்டு தொடர்பில் தம்மைக் கைது செய்யாதிருக்குமாறு கோரி முன்னாள் பொலிஸ் மா அதிபர் தேஷபந்து தென்னகோன் தாக்கல் செய்திருந்த முன்பிணை மனு கோட்டை நீதவான் நீதிமன்றினால் நேற்று நிராகரிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(ம-7)

# மஞ்சவனப்பதி முருகனுக்கு இன்று கொடியேற்றம்

கொக்குவில் அருள்மிகு மஞ்சவனப்பதி முருகன் ஆலய வருடாந்த மகோற்சவமானது இன்று காலை 10.00 மணிக்கு கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவுள்ளது.

தொடர்ந்து பதினெட்டுத் தினங்கள் சிறப்புற நடைபெறவுள்ள இவ்வாலய மகோற்சவந்தனில் எதிர்வரும் 06.09.2025 சனிக்கிழமை தேர்த் திருவிழாவும் மறுநாள் காலை தீர்த்தோற்சவமும் மாலை கொடியிறக்கமும் பக்தி பூர்வமாக இடம்பெறவுள்ளது.

(ம-7)

# கிளிநொச்சியில் சிறப்பு அதிரடி படை உத்தியோகத்தர் கைது

கிளிநொச்சியில் சிறப்பு அதிரடிப் படை உத்தியோகத்தர் ஒருவர் நேற்றுப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கிளிநொச்சி மாவட்டத்தில் கடமையாற்றி வந்த சிறப்பு அதிரடிப் படை உத்தியோத்தர் ஒருவர் சக சிறப்பு அதிரடிப்படை உத்தியோகத்தரின் தொலைபேசியை பயன்படுத்தி நூதன முறையில் ஒரு இலட்சத்து 38 ஆயிரம் ரூபாய் பணத்தை நிதி மோசடி செய்துள்ளார்.

இது தொடர்பில் கிளிநொச்சிப் பொலிஸாருக்கு வழங்கப்பட்ட முறைப்பாட்டுக்கு அமைவாக நேற்று (20) சிறப்பு அதிரடிப்படை சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சிறப்பு அதிரடிப்படை உத்தியோகத்தர் இன்று கிளிநொச்சி நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகக் கிளிநொச்சிப் பொலிஸார் தெரிவித்தனர்.

(ம-7,316)

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூல வரைபு விரைவில் நிறைவு

## ஜனாதிபதி சட்டத்தரணி ரியேன்சி

பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு பதிலாகக் கொண்டுவரப்படவுள்ள பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூல வரைவை விரைவில் நிறைவு செய்ய முடியும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் ஆராய்வதற்காக அமைச்சரவையினால் நியமிக்கப்பட்ட குழுக் கூட்டத்தின் போதே அதன் தலைவர் ஜனாதிபதி சட்டத்தரணி ரியேன்சி ஹர்ஷ குலரத்ண இந்த விடயத்தை குறிப்பிட்டுள்ளார்.

இதன்படி குறித்த சட்டமூலத்தில் கொண்டுவரப்படவுள்ள திருத்தங்கள் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டுள்ளதாக நீதியமைச்சு தெரிவித்துள்ளது.

புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் நியமிக்கப்பட்டுள்ள குழு இதுவரையில் 14 சந்தர்ப்பங்களில் கூடியுள்ளது.

இதன்படி குறித்த குழு மீண்டும் நாளை கூடவுள்ளது.

அதேநேரம் புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலம் தொடர்பில் பொது மக்கள், சிவில் அமைப்புகள் மற்றும் சர்வதேச அமைப்புகள் உள்ளிட்டவற்றிடம் இருந்து பரிந்துரைகள் கோரப்பட்டுள்ளன.

(ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுகாதார சேவையாளர்களின் விடுமுறைகள் ரத்து

## வெளியானது அறிவிப்பு

(கொழும்பு)

சுகாதார அமைச்சின் ஊழியர்கள் விடுமுறை பெறுவதால், அமைச்சின் கடமைகள் மற்றும் அத்தியாவசியப் பணிகளைத் தொடர்வதில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

இதனால் வெளிநாட்டு மற்றும் உள்நாட்டு விடுமுறைகளுக்கான அனுமதியை மறு அறிவித்தல் வரை தற்காலிகமாக இடை நிறுத்த அந்த அமைச்சு தீர்மானித்துள்ளது. அமைச்சின் செயலாளர் விசேட வைத்திய நிபுணர் வைத்தியர் அனில் ஜாசிங்கவினால் வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கையில் இந்தவிடயம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதேநேரம் சுகாதார மற்றும் ஊடக அமைச்சில் காணப்படும் அனைத்து பதவிகளுக்குமான வெற்றிடங்களைப் பூர்த்தி செய்வதற்கான புதிய ஆட்சேர்ப்புகளும் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதாக அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி)

# போதைக்கு அடிமையான பொலிஸார் பதவி நீக்கம்

## பொலிஸ்மா அதிபர் நடவடிக்கை

(கொழும்பு)

போதைப்பொருள் மற்றும் மதுபான பாவனைக்கு அடிமையாகியுள்ள பொலிஸாரை பதவியில் இருந்து நீக்கம் செய்ய பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய நடவடிக்கை மேற்கொண்டுள்ளார்.

அவ்வாறானவர்களைத் துரிதமாக இனம் கண்டுகொள்வதற்கான வேலைத் திட்டமொன்று தற்போது முன்னெடுக்கப்பட்டுள்ளது.

போதைப்பொருள் மற்றும் மதுபானத்துக்கு அடிமையானவர்களாக இனம் காணப்பட்டுள்ள பொலிஸாரை ஆரம்ப கட்டமாக பொலிஸ் மருத்துவமனை மற்றும் தேசிய அபாயகர ஔடதங்கள் கட்டுப்பாட்டுச் சபையின் பரிசோதனைக்கு அனுப்பப்படவுள்ளனர்.

போதைப் பொருள் மற்றும் மதுபானப் பாவனைக்கு அடிமையாகியுள்ள பொலிஸாருக்கு எதிராக ஆரம்பத்தில் திணைக்கள ரீதியான விசாரணைகள் மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படவுள்ளது. அதன்பின்னர் அவ்வாறானவர்களைப் பொலிஸ் சேவையில் இருந்து இடைநீக்கம் செய்யத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதன் அடுத்த கட்டமாக ஒவ்வொரு பொலிஸ் நிலையம் ரீதியாக அவ்வாறானவர்களை இனம் காண்பதற்கான பரிசோதனைகள் முன்னெடுக்கப்படவுள்ளன. (நி)

Lions International District 306 D12

சர்வதேச லயன்ஸ் கழகம்
மாவட்டம் 306 D12 நடாத்தும்
கார்னிவல் மற்றும்
இலவச மருத்துவ சேவைகள்

பருத்தித்துறை வீதி, நல்லூரில் அமைக்கப்பட்டுள்ள திருவிழாக் காலத்துக்கான லயன்ஸ் காரியாலத்தில் கண் பரிசோதனையும், மூக்குக் கண்ணாடி வழங்கலும் இலவச இரத்த அழுத்த பரிசோதனையும் இலவச நீரிழிவு பரிசோதனையும் நடைபெற்று வருகின்றது.

மேலும் எமது காரியாலயத்தில் புதிய லயன்ஸ் அங்கத்துவம் பற்றிய மேலதிக விபரங்களையும் பெற்றுக் கொள்ளலாம்.

அத்துடன் லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதி திரட்டுவதற்காக சர்வதேச லயன்ஸ் கழகம் மாவட்டம் 306 D12 நடாத்தும் **கார்னிவல்** 20.08.2025 தொடக்கம் 24.08.2025 வரை மாலை 5 மணி தொடக்கம் இரவு 12 மணிவரை நல்லூர், சங்கிலியன் பூங்காவில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றது.




லயன்ஸ் கண் மருத்துவமனைக்கு நிதிப் பங்களிப்பு செய்ய விரும்புவோர் தொடர்புகளுக்கு : (Lions Eye Hospital Financial Contributors to Contact)

லயன். Dr K.M.பத்மநாதன் (லயன்ஸ் மாவட்ட ஆளுநர் 306 D12)
077 732 3702
district306d12@gmail.com

We Serve With Humanity (5100)

தமிழ்க்கடவுள் முருகா! தேரேறி எம் வினைதீர்ப்பாய்!



கிருபா லேணர்ஸ்
KIRUBAA LEARNERS කිරුබා ලර්නර්ස්

HOTLINE 077 722 5292

அரச அங்கீகாரம் பெற்ற வடக்கின் முதல் தர சாரதி பயிற்சிப் பாடசாலை

தற்போது வேலணையிலும் 077 222 7121

- எழுத்துப்பரீட்சைக்கு விசேட வீதி ஒழுங்கு வகுப்புக்கள்.
- அசோக் லேடன் பஸ் மூலமான கனரக வாகனப் பயிற்சி.
- மும்மொழியிலும், உங்களுக்கு விரும்பிய நேரங்களிலும் வாகன பயிற்சிகள்.
- சகல கிளைகளிலும் பயிற்சி வகுப்புக்கள்.
- தவணைமுறைக் கட்டணங்கள்.
- குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் விரைவான சாரதி அனுமதிப்பத்திரம்.
- சர்வதேச சாரதி அனுமதிப்பத்திரம் பெற்றுக்கொடுக்கப்படும்.



தலைமையகம்
36, கச்சேரி நல்லூர் வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6699 / 0767 22 5292
kirubalearners@gmail.com
www.kirubalearners.com

| | | | |
|---|---|---|---|
| யாழ் நகர் 021 222 4353 | நெல்லியடி 021 226 0700 | பருத்தித்துறை 021 226 1100 | ஆவரங்கால் 021 222 6688 |
| சித்தங்கேணி 021 225 2500 | சாவகச்சேரி 021 227 0700 | பூநகரி 077 120 5576 | சுன்னாகம் 021 224 2022 |
| விஸ்வமடு [illegible] | மன்னார் [illegible] 1656 | கிளிநொச்சி 021 228 5505 | வவுனியா 024 222 7777 |

(C-3707)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சப்பறத்தில்...

நல்லூர்க் கந்தசுவாமி ஆலய வருடாந்த மகோற்சவத்தின் 23ம் நாளான நேற்று கந்தவேற்பெருமான் கஜவல்லி மஹாவல்லி சமேதரராய் சப்பறத்தில் பவனிவந்து பக்தர்களுக்கு இன்னருள் பாலித்தார். (ம-7,33)

## யாழ்.மாவட்ட...

விசேட விடுமுறை வழங்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களான ப.பத்மநாதன் சத்தியலிங்கம் மற்றும் ரஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி ஆகியோர் பிரதமர் ஹரிணி அமரசூரியவை நேரில் சந்தித்துக் கோரிக்கை விடுத்தனர்.

இதன் பிரகாரம் உடனடியாக கல்வி அமைச்சின் செயலாளருக்கு இன்று வியாழக்கிழமை யாழ்ப்பாண மாவட்ட பாடசாலைகளுக்கு விசேட விடுமுறையினை அறிவிக்குமாறு பிரதமர் பணித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

## அலங்கார...

நல்லைக் கந்தனின் தேர்ப் பவனியை முன்னிட்டு இலட்சக்கணக்கான பக்தர்கள் கூடவுள்ளதால் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. (ம-7)

## கரவெட்டியில்...

மேற்படி நபர் கடந்த ஐந்தாம் திகதி பிற்பகல் வீட்டிலிருந்து நெல்லியடி நகர் நோக்கி மோட்டார் சைக்கிளில் சென்று கொண்டிருந்தபோது கரவெட்டிப் பிரதேச செயலகத்திற்கு முன்பாக விபத்தில் சிக்கி மயக்கமடைந்த நிலையில் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு மேலதிக சிகிச்சைக்காக யாழ். போதனா வைத்தியசாலைக்கு மாற்றப்பட்டிருந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை (19) பிற்பகல் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இம் மரணம் தொடர்பில் யாழ். போதனா வைத்தியசாலை திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேமகுமார் விசாரணைகளை மேற்கொண்டார். (ம-7,60)

## என்ற விம்பத்தை...

களைச் செய்கின்றது என்ற விம்பத்தை உருவாக்க அரசாங்கம் முயற்சி செய்கின்றது என அமைச்சர் பிமல் ரத்நாயக்க குற்றம் சுமத்தியுள்ளார்.

நேற்றைய பாராளுமன்ற அமர்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

"யுத்தம் காரணமாக இந்தியாவிற்கு அகதிகளாகச் சென்ற இராமசாமி தேவராஜா, தேவராஜா புஸ்பராணி ஆகியோர் கைது செய்யப்பட்டமை தொடர்பில் நேற்றுப் பாராளுமன்றில் பேசப்பட்டது.

யுத்த காலத்தில் இந்தியாவின் அகதி முகாமிற்குச் சென்றுள்ளனர். அந்தக் காலகட்டத்தில் உயிரைப் பாதுகாப்பதற்காக சட்டவிரோதமாக இந்தியாவிற்குச் சென்று தமிழ்நாடு, ஆந்திரா மற்றும் பாண்டிச்சேரி போன்ற இடங்களில் 10 வருடங்களுக்கும் மேலாக 110 இலங்கை அகதிகள் இருக்கின்றனர்.

இவ்வாறு அகதிகளாகச் சென்றவர்களுக்கு இலங்கையிலும் இந்தியாவிலும் குடியுரிமை இல்லை. எனவே நானும் அமைச்சர் சந்திரசேகரும் அங்கு சென்று இது தொடர்பில் பேசி குடியுரிமைப் பிரச்சினைக்கு முடிவு எடுக்கப்பட்டது.

எனினும் யுத்தம் முடிவடைந்த பின்னர் 6 ஆயிரம் பேர் வரை மீண்டும் நாட்டிற்குத் திரும்பியுள்ளனர். அவ்வாறு நாடு திரும்பியவர்கள் பாரதிபுரம், கனகபுரம் போன்ற பிரதேசங்களில் காணிகள் வழங்கி மின்சார வசதியையும் ஏற்படுத்திக்கொடுப்பதற்கான வேலைத்திட்டங்களை நான் மேற்கொண்டுள்ளேன்.

ஆனால் இவ்வாறு வருபவர்களை கைது செய்வதாகச் சொல்லப்படுகின்றது. சின்னையா சிவலோகநாதன் என்பவர் காங்கேசன்துறை துறைமுகத்தில் வைத்து கைது செய்யப்பட்டதாகத் தமிழரசுக் கட்சியில் தேர்தலில் தோற்றுப்போன ஒருவர் தெரிவித்திருந்தார். பி736 பிசி25 என்பது தான் அந்த வழக்கு எண்.

எனவே நானும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சரும் தலையீடு செய்து இரண்டு நாட்களின் பின்னர் விடுதலை செய்திருந்தோம். இவ்வாறு கைது செய்வது அரசாங்கத்தின் கொள்கை அல்ல. ஏனென்றால் நாங்கள் நாட்டை ஆளுகின்றோம் ஒரு சில பேரை அல்ல.

அரச உத்தியோகத்தர்கள் பல இருக்கின்றனர். எனவே எங்கோ ஒரு தவறு நிகழலாம். எனவே இவ்வாறான சில விடயங்களை எடுத்துப் பேசுவது அரசாங்கத்தின் மீது சேறு பூசும் செயற்பாடுகளே.

அந்த வகையில் வடக்கிலும் தெற்கிலும் தற்போது இனவாதிகளுக்கு இடம் இல்லை. அவர்கள் தற்போது நிர்க்கதியாகியுள்ளனர். இதன் பின்னணியில்தான் வடக்கு மக்கள் மத்தியில் இந்த அரசாங்கம் கெடுபிடிகளைச் செய்கின்றது என்ற விம்பத்தை உருவாக்கியுள்ளனர்.

இவர்கள்வடக்கில் இருக்கும் ராஜபக்ஷவினரின் நிழலாகச் செயற்படுகின்றனர்" எனவும் அவர் தெரிவித்திருக்கின்றார். (ம-7)

## ஈஸ்...

நேற்று நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றும்போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

2019 ஈஸ்டர் ஞாயிறு குண்டு வெடிப்புக்குப் பின்னணியில் உள்ள மூளையாகச் செயற்படும் நபரை எதிர்கொள்ள இலங்கை சக்தியற்றது. அந்த நபர் அரசாங்கங்கள், இராணுவம் மற்றும் உளவுத்துறை நிறுவனங்களுக்கு நன்கு தெரிந்தவர் என்றும் ஆனால் அவரை அடைய முடியாது என்றும் கூறினார்.

கொடிய தாக்குதல்களின் மூளையாகச் செயற்பட்டவரைக் கண்டுபிடிக்க அதிகாரிகள்துடித்துக் கொண்டிருந்தாலும் உண்மையைப் பொது மக்களுக்கு எளிதில் வெளிப்படுத்த முடியாது என்று கூறினார்.

அது எப்படி நடந்தது என்பது பற்றி நான் சி.ஐ.டியிடம் எல்லாவற்றையும் சொல்லிவிட்டேன். ஆனால் அதில் எதையும் பொதுமக்களுக்கு வெளியிட முடியாது. மூளையாகச் செயற்படுபவரைக் கண்டுபிடிக்க அனைவரும் துடிக்கிறார்கள். ஆனால் உண்மை என்னவென்றால் - அது யார் என்பது அவர்களுக்கு ஏற்கெனவே தெரியும். ஒவ்வொரு அரசாங்கத்திற்கும் இராணுவத்திற்கும் உளவுத்துறைக்கும் தெரியும். மூளையாகச் செயற்படுபவர் எங்கே இருக்கிறார் என்பதை நாம் சொல்ல முடியும்என்றாலும்அவர்களை நாம் எதிர்கொள்ள முடியாது என்று மைத்திரிபால சிறிசேன கூறினார்.

கடுமையான குற்றங்கள் நடந்துள்ளன. சில வேண்டுமென்றே திட்டமிடப்பட்டன. இந்தத் திட்டங்கள் எனது பெயரைச் சேற்றில் இழுத்து, எனது அரசாங்கத்தை நாசமாக்கி, எனது கட்சியை அழித்துவிட்டன என்றார். (ம-7)

மஹஜன சம்பத
திகதி 2025.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 5927
M 6 5 3 2 9 0
அத சம்பத
M 3 2 9 0
சீட்டிழுப்பு இலக்கம் 0502
National Lotteries Board

சுப தவசக்
திகதி 2025.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 0843
இடபம் 09 11 12 42

தன நிதானய
திகதி - 2025.08.20
சீட்டிழுப்பு இலக்கம் - 1957
L 06 52 65 72 L
Double Chance 32754

மெகா பவர்
திகதி 20/08/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2275
B 10 08 19 43 50

ஜய
திகதி 2025.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 0195
B 2 1 2 1

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4169
சீட்டிழுப்பு திகதி 20.08.2025
L 26 28 33 68
L

HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.08.20
சீட்டிழுப்பு இலக்கம் 1236
மிதுனம் 17 33 39 42 மிதுனம்
83250

உத்தியோகபூர்வ முடிவுகள்
20.08.2025 வெற்றி வாரம் 0635
X 5 4 6 8 7 1
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.22.415.808.40
DLB

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2901
சீட்டிழுப்பு திகதி 2025.08.20 தினம் புதன்கிழமை
21 69 71 79 T
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.53,389,223.20

சனிதா
திகதி 20.08.2025 வெற்றி வாரம் 5062
07 55 66 77 I
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 53,092,167.20
ரூ. 50,000/-

ஜயோதா
திகதி 2025.08.20 வெற்றி வாரம் 2154
08 25 31 38 B
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 31,168,231.60

சீட்டிழுப்பு வாரம் 4613
சீட்டிழுப்பு திகதி 20.08.2025 தினம் புதன்கிழமை
02 30 32 36 சிம்மம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.5,634,331.20

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
X 15 27 37 38 75
2077
20.08.2025 புதன்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.588,994,489.80

புதன்கிழமை
வெற்றி வாரம் : 2727
சீட்டிழுப்பு திகதி : 2025.08.20
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.84.004.164.80
ADA KOTIPATHI
28 33 54 65 V

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# LANKATILES
Fine Living Redefined

## விசேட விலைக்கழிவு 30% - 45%


## நேரடி விநியோகஸ்தர்




கந்தனே! கருணை முகத்தோனே!
சூரனை வதம் செய்த முருகவேளே!
எம் முப்பாட்டனே! முதல்வனே!
தேரேறி வந்து – எம் வினைதீர்க்க வா
உமை மைந்தனே!












NKC

# NEW KAMAAL CERAMICS

No.37, Stanley Road, Jaffna.
newkamaalceramics@gmail.com
021 222 2085
021 221 9305
076 255 1560

(C-3708)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல. 191, [illegible] எனும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.08.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.